# அரசு ஊழியர்


**மாத இதழ்**

**2023 ஜூன்**

**மலர்:44** **இதழ்:06**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

அச்சிட்டு வெளியிடுபவர்: **மு.அன்பரசு**

ஆசிரியர்: **ஆ.செல்வம்**

ஆசிரியர் குழு:

**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

வரைகலை: கார்ட்டூன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி

**முகவரி:**

பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:**

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200
தனி இதழ் : ரூ.20


இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

# உள்ளே...


1. **கானல் நீர் காட்சியே இரண்டாண்டு கால ஆட்சி !**
   *தலைவர் மடல் ..........................4*
2. **வானத்தில் வட்டமிடும் வல்லூறுகளை அடித்து வீழ்த்த சிட்டுக்குருவிகளுக்கு சிறப்பான பயிற்சிப் பள்ளியை கட்டி எழுப்புவோம் !**
   *பொதுச் செயலாளர் மேசையிலிருந்து...........................7*
3. **தூதுணவும், துரித உணவும் சொல்லும் சேதி என்ன?** ...............................*9*
4. **‘புதிய கல்விக் கொள்கை’ பெயரில் திரித்து எழுதப்படும் வரலாறும், அறிவியலும்!** ...............*11*
5. **தோழர் என்.சங்கரன் எப்போதும் இயக்கத்தின் கம்பீரம்!** ..................*14*
6. **சங்க வரலாற்றில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தோற்றம் முதல் இன்று வரை** .........*16*
7. **தொழிலாளி வர்க்க பாசத்தை துறக்காத தோழர் சர்க்கரை செட்டியார் !**..........*26*
8. **மாற்றம் காணலே பொறுப்பு!**............*27*
9. **ஒரு ஆழ்கடலின் சுயதரிசனம்!**..........*28*

# கானல் நீர் காட்சியே இரண்டாண்டு கால ஆட்சி !

2021ல் நடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் அரசு ஊழியர் ஆசிரியர்களின் ஏகோபித்த ஆதரவு காரணமாக பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்ற திராவிட முன்னேற்றக் கழகம் திரு மு க ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சிப் பொறுப்பினை ஏற்று இரண்டு ஆண்டுகள் நிறைவு செய்துள்ளது.

`சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம்` என்ற முழக்கத்துடன் பதவியேற்ற திரு.மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு தமிழகத்தின் வளர்ச்சிக்கு, தொழில் துறை, மருத்துவத் துறை, கல்வித் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் விரைந்து செயலாற்றி தமிழகத்திற்கும் தமிழக மக்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்கும் பயனளிக்கும் நல்ல பல திட்டங்களை தீட்டி உள்ளதாக ஊடகங்களில் விளம்பரங்களும் செய்திகளும் சாதனைகளாகக் காட்டப் பட்டுக் கொண்டிருக்கின்றன.

சுதந்திர இந்தியாவில் தமிழகம் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது சமூக, பொருளாதார, கல்வி, மருத்துவத் துறைகளில் பின்தங்கிய நிலையில் இருந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்து இந்தியாவின் முன்னோடி மாநிலமாக தற்போது வளர்ந்திருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. இதற்கு காரணம் தமிழகத்தில் கட்டமைக்கப்பட்ட மிகச்சிறந்த ஆட்சி முறைதான். சமூக நீதியும், சமத்துவமும் இந்த கட்டமைப்புக்கு பெரிய தூண்களாக இருந்தன.

பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு, மாநிலங்களின் வளர்ச்சியை குறித்து சமீபத்தில் நடத்திய ஆய்வில், அடிப்படையில் தமிழகம் இந்தியாவின் பெரிய மாநிலங்களில் முதலிடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2021 ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் அறிக்கையில் திமுக அளித்த வாக்குறுதிகளில் ஒன்று திமுக ஆட்சிக்கு வந்தால் வேளாண்மை துறைக்கு தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்பது. அதன்படி திமுக ஆட்சிக்கு வந்ததும் தமிழக வரலாற்றில் முதன் முறையாக விவசாயத்திற்கு என ஒரு தனி நிதிநிலை அறிக்கை உருவாக்கப்பட்டது. இதன் மூலம் தமிழகத்தில் விவசாயம் மற்றும் விவசாயிகள் நலன் காக்கும் வகையில் ஒரு புதிய சகாப்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விவசாயிகள், வேளாண் வல்லுநர்கள் என துறைசார்ந்த அதிகாரிகள் அனைவரின் கருத்துக்களும் கேட்கப்பட்டு தேவை அடிப்படையிலான திட்டத்தை செயல்படுத்தும் நோக்கில் இந்த வருட நிதிநிலை அறிக்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு கட்டணமின்றி பேருந்துகளில் பயணிக்க அனுமதி வழங்கப்படும் என்ற வாக்குறுதியும், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் உள்ளிட்டோரும் அதில் பயன் பெறலாம் என்ற வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதும் பாராட்டத்தக்கதே.

இத்திட்டத்தை மேலும் செயல்படுத்துவதிலும் போக்குவரத்து கழகங்களை மேம்படுத்தும் வகையிலும், ரூ.130 கோடி அளவில் அடிச் சட்டம் நல்லநிலையில் உள்ள ஆயிரம் பேருந்துகள் புதுப்பிக்கப்பட உள்ளன. மேலும் ரூ 120 கோடி மதிப்பீட்டில் ஆயிரம் புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்பட உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழகத்தில் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வந்த தாலிக்கு தங்கம் திட்டம், மூவலூர் ராமாமிர்தம் உயர்கல்வி உறுதி திட்டம் என்ற பெயரில் மாற்றப்பட்டு புதுமைப்பெண் திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்து வரும் மாணவிகளுக்கு உயர் கல்வியை நிச்சயமாக்கும் வகையில் மாதம் ரூ.1000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தால் இடைநின்ற 150000க்கும் மேற்பட்ட மாணவிகள் மீண்டும் பள்ளிகளில் சேர்ந்து பயின்று வருகின்றனர்

ரூ 1000 உரிமைத் தொகை மகளிர் உரிமைத் தொகை என்பது திமுகவின் தேர்தல் கால அறிவிப்புகளில் ஒன்று. ஏற்கனவே பல்வேறு வகைகளில் உதவித்தொகை பெறுபவர்கள், அரசு ஊழியர்கள் என இவர்களை தவிர்த்து உண்மையான பெண் பயனாளிகளுக்கு இந்த திட்டம் விரைவில் மிகுந்த பயனை தரப்போவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மகளிருக்கு இலவச பேருந்து பயண திட்டம் அவர்களின் பொருளாதார நிலையையும் சமூக பங்களிப்பையும் அதிகரித்துள்ள வேளையில் தற்போது மாதம் ரூ.1000 உரிமைத் தொகை அவர்கள் மத்தியில் புதிய உத்வேகத்தை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த பட்ஜெட்டில் மாநில விவசாய உற்பத்தியை பெருக்கி விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்கில் ஒரு லட்சம் புதிய மின்சார இணைப்புகள் வழங்கப்படும் என்று 2021-22 மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது. அதன்படி முதல்முறையாக இதுவரை இல்லாத அதிகபட்சமாக ஒரு லட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்க முடிவெடுக்கப்பட்டு 2021 செப்டம்பர் 23ஆம் தேதி முதல் முதல்வர் இந்த திட்டத்தை துவக்கி வைத்தார். 3025 கோடி மதிப்பீட்டில் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 23 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் மேலும் 50 ஆயிரம் மின் இணைப்புகள் வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

பள்ளி மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவது போல ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க சட்டம் ஒழுங்கு பிரச்சினையில் ஈடுபடாமல் நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளவும் போதை உள்ளிட்ட தீய பழக்கங்களுக்கு அடிமையாகாமல் அவர்களை நல்வழிப்படுத்தவும், தான் கற்ற கல்வியையும் ஒழுக்கத்தையும் பிறருக்கு கற்றுக் கொடுக்கும் அளவுக்கு அவர்களை வளர்க்கும் ஒரு வழிகாட்டியாக `சிற்பி திட்டம்` அறிவிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக முதற்கட்டமாக 100 அரசுப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பள்ளிகளிலிருந்து மாணவர்கள் அவர்கள் விருப்பத்தின் பேரில் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு நற்பண்புகள் உடற்பயிற்சி குறித்த வகுப்புகள் நடத்தப்படுகின்றன

முந்தைய ஆண்டுகளில் தமிழகத்தில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொங்கலுக்கான அரிசி, சர்க்கரை, கரும்பு உள்ளிட்டவற்றுடன் ரொக்கமும் வழங்கப்பட்ட நிலையில் கடந்த 2022ல் ரொக்கத்துக்கு பதிலாக மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு 2.19 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி சக்கரை கரும்பு மற்றும் ரூ.1000 வழங்கப்பட்டு அது மகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்ற நிகழ்ச்சி ஒன்றில் மாற்றுத்திறனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டா, திருநங்கைகளுக்கு உதவித்தொகை உயர்வு, மருத்துவமனை கட்டிடங்களுக்கு அடிக்கல் உள்ளிட்ட ஏற்றமிகு ஏழு திட்டங்களை தொடங்கி வைத்துள்ளார். அதில் பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு திட்ட விரிவாக்கமும் அடங்கும்

கடந்த இரண்டு ஆண்டுகளில் திமுக அரசின் தேர்தல் வாக்குறுதிகள் மேலே சுட்டிக்காட்டியபடி செயல்பாட்டுக்கு வந்திருந்தாலும் இத்தகைய திட்டங்களை எல்லாம் கடைகோடி தமிழன் வரை கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பும், கடமையும் அடிப்படை ஊழியர்கள் முதற்கொண்டு அரசு அதிகாரிகள் வரை உண்டு. அரசாங்கத்தின் சமூகத் திட்டங்களை செவ்வனே கொண்டு சேர்க்கும் அரசு ஊழியர்களுக்கு தமிழக முதல்வர் 2021 சட்டமன்றத் தேர்தலின் போது அளித்த வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட இந்த இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்றாதது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மத்தியில் வெறுப்பையும் ஏமாற்றத்தையும் ஏறபடுத்தி உள்ளது.

தேர்தல் வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றி விட்டதாக கூறிக்கொள்ளும் தி.மு.க. அரசு, அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கடந்த 20 ஆண்டுகளாக இடைவிடாமல் போராடிக்கொண்டிருக்கும் புதிய ஓய்வூதிய திட்டத்தை திரும்ப பெறுதல் என்ற மிகப்பெரிய கோரிக்கையை தீர்க்க முன்வராத நிலையில் அதற்கான மாற்றுத் திட்டங்கள் எதுவும் ஊழியர்களின் அகோரப் பசியை தீர்க்க உதவாது. மேலும் அகவிலைப்படி, போனஸ், ஈட்டிய விடுப்பை பணமாக்கிக் கொள்ளும் வாய்ப்பு, சுமார் 15 ஆண்டுகளாக போராடிவரும் ஊதிய முரண்பாடுகளை களைதல், சத்துணவு ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம், சாலை பணியாளர்களின் 41 மாத வேலை இழப்புக் காலத்தை வேலை நாட்களாக பாவித்தல், அரசுத் துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்புதல் மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் போன்ற பல கோரிக்கைகள் தூசு படிந்து கிடக்கின்றன. இதில் சிறப்பு என்னவென்றால் நிதி இழப்பு இல்லாத பிரச்சனைகளையேனும் தீர்த்துவைக்க முன்வராதது போன்றவை இந்த அரசாங்கம் நம்மை ஏமாற்றிவிட்டு போய்விடுமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே அரசு ஊழியர்கள் ஆசிரியர்களைப் பொறுத்து திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் இரண்டாண்டு கால ஆட்சி என்பது கானல் நீர் காட்சியே. ●

## சூடா ஒரு கோப்பை சூப்

### போற்றுவோம் ஒற்றுமையினை!

வர்க்கங்கள் திரள்வதை
'வர்ணங்களால்' வெட்டி
மறித்திடப் பார்த்து நிற்கும்

அற்பர்களைப் புறங்கண்டு
சிற்பத்தின் கல் போல
ஒற்றுமையை உருவாக்குவோம்!

போராடும் நமக்கென்று
வேறேது ஆயுதம்?
போற்றுவோம் ஒற்றுமையினை!

போராட்டம் இன்றி ஒரு
புதுமாற்றம் இதுவரை
பூத்ததா வரலாற்றினில்?

அணியாக நின்றிடுவோம்
துணிவாகப் போரிடுவோம்
முடிவாக வெற்றி நமதே!

- கவிஞர் தணிகைச் செல்வன்

# வானத்தில் வட்டமிடும் வல்லூறுகளை அடித்து வீழ்த்த சிட்டுக்குருவிகளுக்கு சிறப்பான பயிற்சிப் பள்ளியை கட்டி எழுப்புவோம் !

அரசு ஊழியர்களுக்கு அரசாங்கங்கள் தரவேண்டிய உரிமைகளை போராடிப் பெறுவதற்காகவும், பெற்ற உரிமைகளை விட்டுவிடாமல் காப்பதற்காகவும் தோன்றிய இயக்கம்தான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்றாலும் நாளடைவில் இது மக்களின் பிரச்னைகளுக்காக குரல் கொடுக்கும் இயக்கமாகவும் சமூக நீதி, மகளிர் உரிமை, மாணவர் கல்வி, தொழிலாளர்கள், விவசாயிகளின் உரிமைகள் போன்ற சமத்துவ சமுதாயத்தை படைப்பதற்கு இடையூறாக இருக்கும் தீய சக்திகளை வேரறுக்கும் இயக்கமாக மாறி பல போராட்டங்களை, கண்டன ஆர்ப்பாட்டங்களை, கருத்தரங்கங்களை நடத்தி அரசு ஊழியர்களிடமும் மக்களிடமும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் இயக்கமாக மாறியது.

சம்பளத்துக்காக, போனசுக்காக, ஊதிய மாற்றத்துக்காக மட்டும் போராடும் இயக்கமல்ல தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்பதை அரசாங்கமும், அரசியல் கட்சிகளும் புரிந்து கொண்ட பின், அரசு ஊழியர்கள் மீதான கருத்தாக்கங்கள் மக்களிடம் மட்டுமல்ல ஆட்சியாளர்களிடமும் மாறியது. இந்த இயக்கத்தின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்ட சமூக ஆர்வலர்களும், தோழமை இயக்கங்களும், அரசியல் கட்சியினரும் நம்முடைய இயக்கத்தின் வளர்ச்சி இந்த சமுதாயத்திற்கு இன்றியமையாதது என்பதை உணர்ந்தனர். சமுதாயத்தை சீர்படுத்துவது மட்டுமல்லாமல் சமுதாயத்தை வழிநடத்தும் இயக்கமாக நம்முடைய இயக்கம் மாற வேண்டுமென்றால் இந்த இயக்கத்திற்கென்று சொந்த கட்டடம் தேவை என்று நம் முன்னோடித் தோழர்கள் முடிவெடுத்து அதற்காக கண்துஞ்சாது பாடுபட்டு சென்னை திருவல்லிக்கேணியில் ஒரு இடம் வாங்கி அதில் கட்டடம் கட்டி தற்போது அது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைமை அலுவலகமாகத் தலை நிமிர்ந்து நிற்கிறது.

நமது இயக்கத்தின் முதற்கட்ட முன்னோடித் தோழர்கள், கொட்டி வைத்த செங்கற்களாய் இருந்த தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை கட்டி முடித்து கட்டடமாக மாற்றி மாபெரும் வரலாற்றுக் கனவை மெய்ப்பட வைத்துள்ளனர். அந்த கட்டிடத்தில் இருந்து கொண்டுதான் இந்த இயக்கம் எந்தவித அச்சுறுத்தலுக்கும் அஞ்சாமல் நூற்றுக்கணக்கான இயக்கங்களை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது. இவற்றில் அரசு ஊழியர்களின் நலன்களுக்கான போராட்டங்களுக்கு இணையாக சமூக அக்கறை சார்ந்த இயக்கங்களை நமது சங்கம் தொடர்ந்து நடத்தி கொண்டிருக்கிறது.

2003ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் நடத்திய எதற்கும் அஞ்சாத, வீரஞ்செறிந்த வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது அன்றைய முதல்வராக இருந்த செல்வி. ஜெயலலிதா அவர்கள் ஒரே அரசாணை மூலம் 1,76,000 அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை பணி நீக்கம் செய்தது, இந்திய அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் அடுத்தமாத குடும்ப செலவுக்கு என்ன செய்யப்போகிறோம் என்று கலங்கி நின்ற அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு நம்முடைய மாநிலத்திலிருந்து மட்டுமல்ல பல மாநிலங்களிலிருந்தும் தோழமைச் சங்கங்களும், அரசியல் சார்பு இயக்கங்களும் நிதியுதவியும் பொருளுதவியும் அளித்து நெகிழ வைத்தது மட்டுமல்ல அது நம்மை நிமிர்ந்து நிற்கவும் வைத்தது. அவர்கள் செய்த நிதியுதவியும் பொருளுதவியும் பணி நீக்கம் செய்யப்பட்ட அரசு ஊழியர்களின் அப்போதைய வாழ்வாதாரத்தை காப்பதற்காக மட்டுமல்ல, இந்த சமூகத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஆற்றி வரும் சமுதாயக் கடமை பட்டுப்போய்விடாமல் பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறையால்தான். அந்த நேரத்தில் பல நல்லுள்ளங்கள் செய்த நிதியுதவியும் பொருளுதவியும் பணிநீக்கம் செய்யப்பட்ட

அரசு ஊழியர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பதற்காக பயன்படுத்தியது போக மீதமிருந்த தொகையுடன் நம்முடைய தோழமைகளிடம் தேவையான நிதியை நமது சங்கம் சேகரித்தது. இந்த தொகையைக் கொண்டு நமது இயக்கத்தை இன்னும் முன்னெடுத்துச் செல்வதற்காக அடுத்தகட்ட ஆயத்தங்களை நாம் மேற்கொண்டோம். அதன் விளைவாக செங்கல்பட்டு மாவட்டம், ஆத்தூர் கிராமம் புறவழிச்சாலை அருகில் 10277 சதுரடி காலிமனையை 21-08-2013 அன்று வாங்கியுள்ளோம். அதை நம்முடைய அரசு ஊழியர்களுக்கு தொழிற்சங்கப் பயிற்சியளிக்கும் வகையில் தொழிற்சங்க ஆசான் M.R.அப்பன் பயிற்சிப்பள்ளிக் கூடமும், இயக்கத்தில் உள்ள நிர்வாகிகளுக்கு புத்தாக்கப் பயிற்சி அளிக்கும் வகையில் சமூக அக்கறையுள்ள கருத்தரங்கங்கள் நிகழ்ச்சிகள் நடத்தவும் ஒரு கட்டடம் கட்டலாம் என திட்டமிட்டிருந்தோம். ஆனால் இடைப்பட்ட காலத்தில் நம்முடைய இழந்த உரிமைகளை மீட்பதற்காக தொடர்ந்து இடைவிடாத போராட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் இந்த யோசனையை சிலகாலம் தள்ளி வைக்க வேண்டியதாகி விட்டது.

ஆனால் இன்று இந்திய அளவில் திணிக்கப்பட்டு வரும் மதசார்பான கோட்பாடுகள், மகளிருக்கு எதிரான வக்கிரங்கள், விவசாயிகளுக்கு எதிரான நிலைப்பாடுகள், ஏழை எளிய மக்களின் வற்றிய தோல்களின் மீது சிறிதும் மனிதாபிமானம் இன்றி ஏற்றப்படும் விலை உயர்வுச் சுமைகள், கார்ப்பரேட் நிறுவனங்களின் நலன்களுக்காக மட்டுமே செயல்படும் அரசாங்கமாக இந்திய அரசு மாறி வரும் நிலைமைகள், என்பன நீடிக்கும் நிலையில் பறிக்கப்பட்ட உரிமைகளை ஆட்சிக்கு வந்ததும் வழங்குவதாகக் கூறி வஞ்சகமாக அரசு ஊழியர்களை ஏமாற்றி சிம்மாசனத்தில் உட்கார்ந்து கொண்டு, சொன்ன சொல்லை காப்பாற்றாமல் மௌனம் காக்கிறது மாநில அரசாங்கம். இவர்களுக்கு எதிராக அரசு ஊழியர்களை மட்டுமல்ல அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைக்க வேண்டிய அவசியமும் தொழிற்சங்க ரீதியாக, வர்க்க ரீதியாக, அரசியல் ரீதியாக நம் மக்களை வளர்த்தெடுக்க வேண்டிய அவசியமும் எழுந்துள்ளது. அந்த வரலாற்றுக் கடமையை இரண்டாம் கட்ட இலட்சியமாக நாம் முன்னெடுத்து நிறைவேற்றுவதன் மூலம் நமது மாநிலத்தை மட்டுமல்ல இந்திய நாட்டையே சாதி சமய பேதமற்ற சமத்துவ சமுதாயமாக மாற்ற முடியும். அதேசமயம், உழைப்புக்கேற்ற ஊதியத்தை உறுதி செய்யும் அரசாங்கத்தையும் நிலை நிறுத்த முடியும். ஏற்கெனவே மாவட்டங்கள் தோறும் சொந்த கட்டடங்கள் என்ற நம்முடைய கனவு மெய்ப்பட்டு வரும் நிலையில், நமக்கான உரிமைகளோடு, நாட்டு நலன்களுக்கு எதிராக செயல்பட நினைக்கும் எவரையும் இடித்துரைத்து தவறுகளை தட்டிக்கேட்டு தடுத்து நிறுத்தும் நீதியின் மனசாட்சியாக இந்த கட்டடம் இருக்கும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

இந்த வரலாற்றுக் கடமையை நிறைவேற்றிட நாம் செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், ஆத்தூர் கிராமம் புறவழிச்சாலை அருகில் வாங்கியுள்ள இடத்தில் தொழிற்சங்க பயிலரங்கம், கருத்தரங்கம் நடத்துவதற்காக சிறப்பான வசதிகள் கொண்ட கட்டடத்தை கட்டி முடிக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற யோசனை எழுந்துள்ளது. அரசு ஊழியர்கள் நினைத்தால் முடியாத காரியமில்லை. அதுவும் நாணில் பூட்டிய அம்புகளாய் நம்முடைய செயற்குழு உறுப்பினர்களும் மாநிலத் தலைமையும் இருக்கும்போது, இட்டச் செயலை சுட்டிய நேரத்தில் செய்து முடிக்கும் வல்லமைக் கொண்ட நம்முடைய தோழமைகளிடம் இதற்கான முன்மொழிவினை, உங்கள் ஒவ்வொருவரின் ஒப்புதலுக்காகவும் முன்வைக்கிறேன்.

எத்தனையோ நற்செயல்களுக்காக ஒரு நாள் ஊதியத்தை மனமுவந்து வழங்கியுள்ள நாம், நமக்காக, நம்முடைய சமுதாய அவலங்களுக்காக போராடும் நம் இயக்கத்தின் வளர்ச்சிக்காக செங்கல்பட்டு மாவட்டம், ஆத்தூர் கிராமம் புறவழிச்சாலையில் வாங்கியுள்ள 10277 சதுரடி காலிமனையில் சிறப்பான ஒரு கட்டடம் அனைத்து வசதிகளுடன் கட்டி முடித்திட மனமுவந்து நிதியளிப்போம், அனைவரும் ஒன்றிணைந்து கட்டி முடிப்போம் என உறுதி ஏற்போம். ●

# தூதுணவும், துரித உணவும் சொல்லும் சேதி என்ன?

**- ஜிஜி**

இன்று தமிழகத்தின் தெருக்களில் எல்லாம் பாதி கடைகள் பாஸ்ட்புட் என்று சொல்லக்கூடிய துரித உணவகங்கள் தான் நிரம்பிக் கிடக்கின்றன. முன்பெல்லாம் ஞாயிற்றுக்கிழமைகளில் வீட்டில் குடும்பத்தினர் அனைவரும் உட்கார்ந்து அம்மாவும் அத்தையும் அல்லது அம்மாவும் பாட்டியும் செய்யும் புலால் உணவை ருசித்து சாப்பிடும் நிலை இருந்தது. ஆனால் இப்போது ஞாயிற்றுக் கிழமைகளில் கூட உணவகங்களில் சாப்பிட கூட்டம் காத்துக்கிடக்கிறது. சில உணவகங்களில் பார்சல் வாங்க 100க்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் வரிசையில் நிற்கும் காட்சிகளை காண முடிகிறது. எங்கு நோக்கினும் உணவு உணவு உணவு. தமிழகத்தில் உணவு வெறும் வணிகம் ஆகிவிட்டது. எல்லோரும் எதையாவது தின்றுகொண்டே இருக்க வேண்டும் என்று ஒட்டுமொத்த தமிழகமும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த உணவுகளில் எதுவுமே வழக்கமான உணவு வகை கிடையாது. உதாரணமாக சோறு, இட்லி, தோசை, பொங்கல், உப்புமா போன்றவை. பல உணவகங்களில் இல்லை. ரொட்டி வகைகளும், கறி வகைகளும் மட்டுமே இரவு உணவில் பெரிதும் பரிமாறப்படுகிறது. மதிய வேளைகளில் கூட சோற்றை விட, பிரியாணி வகைகள், பரோட்டா வகைகள் அதிகம் காணப்படுகிறது.

இந்த வரிசையில் காலை உணவு மட்டும் பெரிய அளவில் பாதிக்கப்படவில்லை. விரைவில் அதுவும் பர்கர், சாண்ட்விச், நூடுல்ஸ், பாஸ்தா போன்ற உணவு வகைகளால் நிரப்பப் படலாம். தொடர் தொலைக்காட்சி விளம்பரங்கள் அதனைத்தான் புகுத்திக் கொண்டிருக்கின்றன.

ஒரு கடையில் 99 வகை பரோட்டாக்கள் கிடைக்கும் என்ற பலகை, இன்னொரு கடையில் 27 வகையான சிக்கன்கள் என்ற போர்டு. ஐஸ்கிரீமைக் கூட பொரித்து திண்கிறார்கள், சிஸ்லர் எனும் நெருப்பு கல்லில் ஐஸ்கிரீம் பரிமாறப்படுகிறது. உலகில் உள்ள அனைத்து வகை உணவுகளும் தமிழகத்தில் கிட்டத்தட்ட அனைத்து இடங்களிலும் கிடைக்கிறது. பிசா(சு), சவ(ம்)ர்மா கடைகள் தெருவுக்கு தெரு தென்படுகின்றன.

திக்கு எங்கிலும் பேக்கரி. அதில் விற்கப்படும் பொருட்கள் அங்கு செய்யப்படுவதில்லை. யாரோ ஒருவர் செய்து அனைத்திற்கும் வழங்குகிறார்.



சுவை என்பது கூட பழைய சுவை இல்லை. அதிகப்படியாக டால்டா கலப்பு போன்றவை இருக்கிறது. நாக்கில் வைத்தவுடன் கரைய வேண்டும். ஊரில் எவனுக்கும் பல் இல்லை. கடிக்க வேண்டிய அவசியமில்லை என்கிறது அடுமனை. கடினமான, கடிக்கும் பொருட்கள் விற்பனையில் இல்லை. இனிப்பு வகைகள், கேக் வகைகள் பெருகிவிட்டன. இவற்றால் பல் மருத்துவமனைகள் பெருகியிருக்கின்றன, அண்ணாச்சி கடைகளிலும், பாய் கடைகளிலும் தமிழ் பொருட்கள் கிடைப்பதில்லை. பெரும்பாலும் வட இந்திய பொருட்கள்தான் விற்பனைக்கு இருக்கிறது.

ஏன் தின்பண்டங்கள் கூட ஹல்திராம்ஸ் பாக்கெட்டுகளில் தான் இருக்கிறது. ஒரு காலத்தில் என்று 'தூ' என்று துப்பிய சுவை இன்று விமான நிலையம் முதல் பெட்டிக்கடை வரை மக்களுக்கு பழக்கமாகிவிட்டது.

இதற்கு அடிப்படை காரணம் டி-மார்ட் போன்ற கடைகள் அவர்கள் பெருமளவில் கொள்முதல் செய்வதால் மட்டுமே குறைந்த விலைக்கு கொடுக்க முடியும். ஆகையால் அவர்கள் பெரும் வணிக நிறுவனங்களின் பொருட்களை தான் விற்கிறார்கள். அதன் நாகரீக தோற்றத்தைப் பார்த்து, அங்கு சென்றால் அனைத்தும் கிடைக்கும் என்று மக்கள் செல்ல தொடங்குகிறார்கள். உணவிற்காக செய்யும் செலவு வீண் செலவாக யாரும் கருதுவதில்லை. அதுதான் இந்த வணிகத்தின் அடிப்படை மூலதனம்.

முன்பெல்லாம் வெளியே செல்லும் நேரத்தில் வீட்டுக்கு வந்து சமைக்க நேரமில்லாத காரணத்தினால் வெளியே உணவருந்தும் பழக்கம் இருந்தது. ஆனால் இப்போது எந்த நேரத்திலும் அதனை ஆர்டர் செய்தால் வீட்டிற்கு வந்துவிடும் என்று ஞாயிற்றுக்கிழமைகளில் கூட சமைப்பதில்லை. பட்டி தொட்டிகளில் எல்லாம் ஸ்விக்கி, ஜோமேட்டோ, தூதுணவு வந்துவிட்டது. இங்கு பசி பேசப்படுவதில்லை. ருசி மட்டுமே பேசப்படுகிறது. ஒவ்வொரு நிலப்பகுதியின் உணவும் அந்தந்த சூழலுக்கு ஏற்ற மாதிரி உருவாக்கப்பட்டவையே. ஆனால் அவை அனைத்தையும் அனைத்து இடங்களுக்கும் கொண்டு சென்று சேர்ப்பது மனிதர்களின் மரபணுவை சிதைக்கும் பெரும் போர்.

தமிழர்கள் காலம் கடந்துதான் தமிழ் மொழியில் கலந்திருக்கும் பிற மொழிச் சொற்களை அகற்றப் போராடினார்கள். அது இன்றளவும் வெற்றி பெறவில்லை என்பது ஊரெங்கும் இருக்கும் எழுத்துப் பலகையும் மக்கள் பேச்சும் தெளிவுபடுத்துகிறது. தமிழ் மொழி அழிகிறது என்பதுதான் உண்மை. அதேபோல் அன்னிய உணவால் தமிழ் இனம் அழிந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். சுவை என்பது நஞ்சில் இருந்து வெளியேறி, பசி எனும் இயல்புக்கு மருந்திடும் தமிழர் உணவு வகைகளுக்கு திரும்பவேண்டும். அந்நிய உணவுகளில் இருந்து நம் மக்கள் தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும் இது நடக்காவிட்டால் எழுதி வைத்துக்கொள்ளுங்கள், அடுத்த பத்து வருடங்களில் ஊரெங்கும் புற்றுநோய் மருத்துவமனை பெருகிவிடும். இளம் வயதில் மரணம், எடை பருமனான குழந்தைகள், மாரடைப்பு என அனைத்து நோய்களும் தலைவிரித்தாடும்.

இந்த மாத கவிதை :

**தாயுள்ளத்தோடு**<br>
**ஆட்டின் முதுகிலிருந்து**<br>
**உண்ணிகளை அகற்றினார்**<br>
**விடுமுறை நாளில்**<br>
**கறிக்கடை ராவுத்தர்.**

# ‘புதிய கல்விக் கொள்கை’ பெயரில் திரித்து எழுதப்படும் வரலாறும், அறிவியலும்!

**- தெ.வாசுகி**

கொரோனா பாதிப்புகளுக்குப் பிறகு இந்திய ஒன்றிய அரசாங்கம் பள்ளி மாணவர்களின் பாடங்களை குறைக்கப் போவதாக சொன்னபோது மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஏன் சில பெற்றோர்களுக்கும் கூட மகிச்சியாக இருந்தது. ஆனால் குறைக்கப்பட்ட பாடத் திட்டங்கள் எல்லாம் நம்முடைய குழந்தைகள் தெரிந்து வைத்திருக்க வேண்டிய முக்கிய வரலாறுகள். சமத்துவக் கோட்பாடுகள், பரிணாம அறிவியல்கள். ஆனால் இவற்றை நீக்கி பாடங்களை குறைத்துவிட்டதாகக் காட்ட தேசியக் கல்வி ஆராய்ச்சி பயிற்சிக் கவுன்சில் (NCERT) மூலம் பள்ளி பாடங்களை குறைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

இருக்கின்ற பாடங்களை குறைப்பதாக கூறிக்கொண்டே சனாதனக் கோட்பாடுகளை பாடப் புத்தகங்களில் திணிக்கும் ஏற்பாடுகளை செய்து வருகிறது ஒன்றிய அரசு. தற்போது புதிய கல்விக் கொள்கை எனும் பெயரில் இந்துத்துவா கொள்கைகளை பள்ளிப் பாடங்களில் சேர்த்து வருவதுடன் சனாதன பிற்போக்கு சாதியத்தை கல்வி என்ற பெயரில் மக்கள் மனதில் விதைக்க முயல்கிறது. இந்த நிலை தொடர்ந்தால் நாளை நம்முடைய பள்ளிப் பாடப் புத்தகத்தில் இருந்து `சாதிகள் இல்லையடிப் பாப்பா` என்ற பாரதியின் குரலும், `சாதி இரண்டொழிய வேறில்லை` என்ற சமத்துவ வரிகளும்கூட நீக்கப்படலாம். பாடத் திட்டங்களில் உண்மையான வரிகளை நீக்கிவிட்டு சனாதனக் கொள்கைகளைப் பரப்பும் ஒன்றிய பாரதிய ஜனதா அரசின் சூழ்சிகளை புரிந்துகொண்ட நாம் அதை முறியடிக்க ஒன்று திரள ஆயத்தமாக வேண்டும் என்பதால் இந்தக் கட்டுரை காலத்தின் அவசியம் கருதி வெளியிடப்படுகிறது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக பிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்கு அதிக நாட்களாக வர முடியாத சூழ்நிலையை காரணம் காட்டி பாடத்திட்டங்கள் குறைக்கப்பட்டிருந்தாலும், தற்போதைய ஒன்றிய அரசின் நோக்கம் என்னவோ தனது இந்துத்துவா கொள்கையைப் பரப்புவதற்கும், சனாதன பிற்போக்கு சாதியத்தைத் திணிப்பதற்கும் பயன்படுத்திக்கொள்வது தான்.

ஏற்கனவே வரலாற்று பாடத்திட்டத்தில் இஸ்லாமியர்களின் ஆட்சி, காந்தி படுகொலை நிகழ்வு, குஜராத் கலவரம் ஆகியன நீக்கப்பட்டு விட்டன. தற்போது பத்தாம் வகுப்பு அறிவியல் பாடத் திட்டத்தில் மரபியல் மற்றும் பரிணாமவியல் பாடப்பகுதியில் பரிணாமவியல் முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவுகள், இந்த பாடத் திட்டத்தை உருவாக்கிய குழுவின் ஆலோசனையின்படி எடுக்கப்பட்டதா அல்லது இது ஒரு மறைமுக முடிவா என்பது குறித்து எந்தவித விளக்கமும் இல்லை பத்தாம் வகுப்பு அறிவியல் பாடத்தில் தற்போது நீக்கப்பட்டுள்ள பரிணாமவியல் பாடப்பகுதிகள் சுமார் 12 பக்கங்கள் ஆகும். நீக்கப்பட்ட பாடங்களில் பரிணாமம் பற்றிய அறிமுகம், பரிணாமமும் அதன் வகைகளும், பரிணாமம் என்பது மென்மேலும் வளர்ச்சி என்பதல்ல போன்ற பெரும் தலைப்புகளில் உள்ள விளக்கங்கள் நீக்கப்பட்டுள்ளன மேற்கண்ட பாடக்குறிப்புகள் உயர்நிலை வகுப்பு முடிந்து செல்லும் மாணவருக்கு பரிணாமம் பற்றிய அனைத்து அடிப்படை கருத்துக்களையும் அறிவியல் வழியில் புரிந்து கொள்ள வழிவகுக்கிறது.

கடந்த பல ஆண்டுகளாக இருந்துவரும் பரிணாமவியல், டார்வின் போன்ற பாடங்கள்

ஏன் தற்போதைய ஒன்றிய அரசுக்கு ஏற்றதாக இல்லை என்றால் தற்போதைய ஒன்றிய அரசு சனாதான கோட்பாட்டின்படி இயங்க துவங்கியிருக்கிறது என்பது இதன் கீழே தரப்படும் விபரங்களை படித்தால் புரியும். பரிணாமவியல் என்பது கடவுளின் படைப்புக் கோட்பாட்டிற்கு எதிரானது. உயிரினங்கள் படிப்படியாக சிறிய மாற்றங்கள் பெற்று நுண்ணுயிரிகள், தாவரங்கள், விலங்குகள், மனிதன் உட்பட எல்லா உயிரினங்களும் பரிணமித்து கொண்டு வருகின்றன என்கிறது பரிணாம அறிவியல். ஆனால் இது ஒன்றிய அரசின் இந்துத்துவா பார்வைக்கு ஏற்புடையது அல்ல. எப்படி முகலாயர்களின் ஆட்சி அவர்களுக்கு ஏற்புடையதாக இல்லையோ, அதைப் போன்றதுதான் பரிணாம வளர்ச்சியும்.

டார்வின் கொள்கை என்பது கடலில் இருந்து உயிர் உருவாகி மனிதனாக உருவாவதை விளக்குகிறது. ஆனால் இந்துத்துவா கூறும் தசாவதாரம் மேலும் ஒரு படி சென்று அறிவு அரசியல் திறன் படைத்த அவதாரங்கள் மூலம் விளக்குகிறது. தசாவதாரப் படி நீரில் உருவான மச்ச அவதாரம், அதைத்தொடர்ந்து நீர்நிலம் வாழும் ஆமை அவதாரம், பின்னர் தரையில் வாழும் பன்றி அவதாரம், பின்னர் சிங்கமுக மிருகமும் மனிதனும் கொண்ட சிம்ம அவதாரம், அதன்பின் வந்த வாமண அவதாரமே சிறிய அறிவு பெற்ற முதல் மனிதன் என்றும் பின்னர் தோன்றிய அவதாரங்கள் ராமன் கிருஷ்ணன் மேலும் அறிவு பெற்ற மனிதர்களாக பரிணமித்துள்ளதை தசாவதாரம் விளக்குகிறது

டார்வின் கொள்கை என்பது மதக் கோட்பாட்டின்படி இல்லாதது. ஆனால் தசாவதாரம் என்ற கோட்பாடு பரிணாமத்தை விளங்குகிறது என்று எல்லோர் நினைவிலும் உள்ளது. எனவே தசாவதாரத்தைத் தான் பயிற்றுவிக்க வேண்டும் என விஷ்வ இந்து பரிஷத்தின் துணைத் தலைவர் சுரேந்திர ஜெயின் கூறுகிறார்.

அதேபோல் கல்வித் துறையின் முன்னாள் இணையமைச்சர் சத்தியபால் சிங், டார்வின் கோட்பாடு அறிவு ரீதியாக தவறானது என்றும் நமது முன்னோர்கள் வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ குரங்கிலிருந்து மனிதனாக மாறுவதை பார்த்ததாகக் கூறவில்லை அப்படி இருக்கும்போது பள்ளி, கல்லூரி பாடத் திட்டங்களை மாற்றியமைப்பது சரிதானே என அதிரடியாக பேசியிருக்கிறார். இந்த அடிப்படையில்தான் என்சிஇஆர்டி அறிவியல் பாடப் புத்தகங்களில் இருந்து பரிணாமவியல் நீக்கப்பட்டுள்ளது.

பரிணாமவியல் நீக்கப்பட்ட இதன்மூலம் பல லட்சக்கணக்கான மாணவர் மாணவிகள் மற்றும் பரிணாமம் பற்றி தெரியாமலேயே உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்து வெளியே வருவார்கள். பொதுக் கல்வியில் பரிணாமவியலை நீக்குவது என்பது மிகப்பெரிய சதியாகும். உயிரி பரிணாமமும், மனித பரிணாமமும் அறிவியல் ரீதியாக கற்பிக்கப்பட்டு ஜாதி மத இன வேறுபாட்டை களைவதற்கான அறிவியல் கல்வியாகும். தற்போது இப்பாடங்களை நீக்குவதன் மூலம் இது முற்றிலும் துடைத்தெறியப்பட வாய்ப்புள்ளது.

மகாத்மா காந்தி கொலை செய்யப்படவில்லை என்பதிலிருந்து, 2022 2002 குஜராத் கலவரங்கள் நடக்கவே இல்லை என்பதை மறைக்கவும் 3000 இஸ்லாமியர் கொலைகளை பாடப்புத்தகத்தில் இருந்து நீக்கிவிட்டது ஒன்றிய அரசு. வரும் சந்ததியினர் நம் நாட்டில் எதை அறிய வேண்டும், எப்படிப்பட்ட பிரஜைகளாக வளரவேண்டும் என்பதை தீர்மானிக்கும் கல்வியிலிருந்து சார்லஸ் டார்வினின் பரிணாமவியல் நீக்கி தனது சனாதனத்தை திணித்துள்ளது.

பாஜகவின் காவித் திணிப்பு புதிதல்ல என்றாலும் தற்போது நடப்பது சனாதன பிற்போக்கு சாதிய திணிப்பாகவும், தீவிர இந்து ராஷ்டிர மதவெறித் திணிப்பாகவும் உள்ளது 1961ல் இந்தியக் கல்வியின் புத்தகக் குழுமமான என்சிஇஆர்டி உருவாக்கப்பட்டபோது நாட்டின் ஒற்றுமை, தேசபக்தி, மதநல்லிணக்கம், அறிவியல் வளர்ச்சி, பகுத்தறிவு போன்றவற்றை வரும் சந்ததிக்கு விதைப்பது அதன் நோக்கமாக அறிவித்தார்கள். வரலாற்று பாடப் புத்தகங்களில் எழுதிட தேசிய அளவில் நீலகண்ட சாஸ்திரி, முகமது அலி, 7ஆவது மற்றும் 8ஆவது

வகுப்புகளுக்கு ரொமிளா தப்பாரின் `முற்கால இந்தியா` `நவீன இந்தியர்` போன்ற நூல்களை நேரடியாக பாடத்தில் வைக்கப்பட்டன. சத்யேந்திரநாத் போஸ், மெக்னாக் சாகா, விக்ரம் சாராபாய் போன்றவர்களின் வழிகாட்டுதலின்படி அறிவியல் பாடநூல்களை பேராசிரியர் யஷ்பால், ராஜாராமண்ணா போன்றோர் எழுத முடிந்தது.

2002ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகள் ஆட்சியில் இருந்த வாஜ்பாய் பாரதிய ஜனதா அரசு வேத கணிதம், வேத அறிவியல் என பாடங்களைத் திரித்தது. ஆர்எஸ்எஸ் வாதிகளை பாடப்புத்தகத்தில் நுழைத்து, அப்போதே பாபாசாகேப் அம்பேத்கரை கேவலப்படுத்தும் கேலிச் சித்திரங்களை குழந்தைகளின் பாடப் புத்தகத்தில் திணித்தவர்கள் 2014 இல் ஆட்சிக்கு வந்த பிறகு மோடி தலைமையில் காவி கல்விக் கொள்கையை வெளியிட்டார்கள். இந்திய வரைபடத்தை முதலில் அகண்ட பாரத வரைபடமாக பாகிஸ்தானையும் சீனாவையும் கூட உள்ளடக்கி பாடத்தில் வைத்து சர்வதேச அளவில் கேலிக்கூத்தாகினார்கள். அவுரங்கசீப் பற்றிய பாடத்தை நீக்கி முகலாயர்களை வரலாற்றில் இருந்தே எடுத்து விட்டார்கள் மாபெரும் தேசத்தலைவர்கள் இஸ்லாமியர் தலித்துகள் என்றால் அவர்களுடைய பெயர்களை பாடப் புத்தகங்களில் இருந்தே நீக்கிவிடுவது நடக்கிறது இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் மௌலானா அபுல் கலாம் ஆசாத் பற்றிய பாடம் முற்றிலும் நீக்கப்பட்டு உள்ளது. அய்யங்காளி குறித்த தலித் விடுதலை எழுச்சி நீக்கப்பட்டுள்ளது உட்பட பல்வேறு கொடுமைகள் நடந்துள்ளன. 1930ல் ஜனவரி 26ல் நேரு மூவர்ணக் கொடியை பூரண சுயராஜ்ய கொடியாகப் பிரகடனப்படுத்தி அதற்காக 7 ஆண்டு சிறை சென்றார். அதனால் தான் பிற்காலத்தில் இந்திய குடியரசு தினமாக ஜனவரி 26ஐ ஏற்றது என்கிற வரலாற்று உண்மையை கூட பாடப்புத்தகத்தில் இருந்து நீக்கிவிட்டார்கள். அறிவியல் எழுச்சியையும் முடக்கிட டார்வின் கொள்கையோடு வேதி அட்டவணையும் நீக்கப்பட்டுள்ளது. மனிதனை பிரம்மா வர்ணங்களாக, தலையில் பிராமணன் முதல் காலில் சூத்திரன் வரை படைத்தான் என்பதையும், அக்னிகுண்டம் வேத பலியிடுதல் என இந்து மத வெறியாட்டத்தை அடுத்த சந்ததிக்கு விதைக்கும் காவிக் கயமைத் தனத்தை கடுமையாக நாம் எதிர்க்க வேண்டும். மனித நேயம், மதச்சார்பின்மை, சகோதரத்துவம் வேற்றுமையில் ஒற்றுமை இவற்றை பேணிக்காத்து அடுத்த தலைமுறையினரிடம் எடுத்துச் செல்ல கல்வியில் காவி மயமாக்கலை எதிர்த்து களம் இறங்க இப்போதே நாம் தயாராவோம்.

ஒன்றிய பாஜக அரசு புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் நாடு முழுவதும் கல்வியில் சனாதன இந்துத்துவ கோட்பாட்டை புகுத்த தீவிரமாக முயற்சித்து வரும் நிலையில் பாடப்புத்தகங்களை மாற்றி அமைப்பது, சுதந்திர போராட்ட வரலாறு உட்பட இந்திய வரலாற்றை மத அடிப்படையில் மாற்றி மாணவர்களுக்கு கற்பிப்பது போன்ற ஆபத்தான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், அத்தகைய ஒன்றிய அரசின் தவறான நடவடிக்கைகளை முறியடிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டின் நிலைமைகளுக்கு ஏற்ப மாநில கல்வியை, மாநில கல்விக் கொள்கையை உருவாக்கிய நிபுணர்கள் கொண்ட குழுவை அமைத்தது. தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கை அனைவராலும் வெகுவாக பாராட்டப்பட்டு, தமிழ்நாடு மாணவர்களுக்கு விஞ்ஞான அடிப்படையிலான அறிவு கல்வி கிடைத்திட நல்வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாடு அரசின் மகத்தான முயற்சிக்கு முட்டுக்கட்டை ஏற்படும் வகையில் மாநிலக் கல்விக் கொள்கை உருவாக்கம் குழுவில் ஏற்பட்டுள்ள சர்ச்சை, மிகுந்த கவலையளிப்பதாக உள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு அரசின் உயர்ந்த நோக்கம் சிதைக்கப்பட்டுவிடுமோ என்ற ஆழ்ந்த கவலை ஏற்படுகிறது. எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இப்பிரச்சனையில் தலையிட்டு கல்விக் கொள்கை குழுவினருக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைச் சரிசெய்து ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கைக்கு மாற்றான விஞ்ஞான அடிப்படையிலான மாநிலக் கல்விச் கொள்கை உருவாக்கிட கவனம் செலுத்த வேண்டும். ●

அஞ்சலி

# தோழர் என்.சங்கரன் எப்போதும் இயக்கத்தின் கம்பீரம் !

**- என். வெங்கடேசன்**


தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க ஸ்தாபகத் தலைவர்களுள் ஒருவரும், ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்ட தலைவராகவும், மாநிலத் துணைத் தலைவராகவும் செயல்பட்ட தோழர். என்.சங்கரன் அவர்கள் 19-05-2023 அன்று காலமானார்.

தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையில் 1958 ஆம் ஆண்டு உதவி வேளாண்மை அலுவலராக பணியில் சேர்ந்த தோழர்.என். சங்கரன் ஒன்றுபட்ட என்.ஜி.ஜி.ஓ அசோசியேசனில் இணைந்து செயல்பட்டார்.

பின்னர் என்.ஜி.ஓ.யூனியனில் சிவ. இளங்கோ ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு அரசுடன் சமரசம் செய்து கொண்டு ஊழியர்கள் நலன்களுக்கு எதிராக செயல்பட்டதால், சங்க ஜனநாயகத்தை பாதுகாத்து ஊழியர் நலன்களை பாதுகாப்பதற்காக தோழர்.எம்.ஆர்.அப்பன் அவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்ட நடவடிக்கைக் குழுவில் முக்கியப் பங்காற்றினார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் இயக்கத்தின் விதியை மாற்றி அமைக்க என்ன செய்வது என்பது குறித்து முடிவெடுக்க நடவடிக்கை குழுவினர் 1984 பிப்ரவரி 12ஆம் தேதி வேலூரில் ஒன்று கூடினர். மாவட்டத்திற்கு 5 பேர் என்கிற அடிப்படையில் 17 மாவட்டங்களில் இருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் அரசு ஊழியர்களைச் சந்தித்து எழுச்சி நாள் கூட்டங்கள் நடத்துவது என முடிவு செய்து நடைபெற்ற ஊழியர் சந்திப்பு பிரச்சாரக் கூட்டங்களில் தோழர்கள். எம்.ஆர்.அப்பன்,கே. கங்காதரன், என்.எல். சீதரன் தோழர்.ஆர்.முத்து சுந்தரம்,எஃப்.எம். குத்புதீன் ஆகியோருடன் தோழர்.என்.சங்கரன் அவர்களும் கலந்து கொண்டார்.

06.05.1984 மதுரையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அமைக்கப்பட்ட உடன் 09.05.1984 தூத்துக்குடியில் நடைபெற்ற பொதுக்குழுவில் சிவ.இளங்கோ தலைமையிலான சங்கம் கலைக்கப்பட்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என செயல்படுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது 04-09-1984 அன்று தோழர். எம்.ஆர்.அப்பன் அவர்கள் கலந்து கொண்ட மாவட்ட பிரதிநிதிகள் மாநாடு தூத்துக்குடி சங்க கட்டடத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவராக தோழர்.என்.சங்கரன் மாவட்டச் செயலாளராக தோழர்.எஸ்.ஆறுமுகம் மாவட்டப் பொருளாளராக தோழர்.ஆர். நடராஜன் ஆகியோர் உட்பட நிர்வாகிகள்



தேர்வு செய்யப்பட்டனர். 1985 ஜூன் மாதம்த மிழ்நாடு அரசு அலுவலகங்களில் வாரத்திற்கு இரு நாட்கள் விடுமுறை அமலுக்கு வந்தது. தூத்துக்குடியில் சங்கத்தில் தங்கி இருந்த தோழர்கள் வீடுகளுக்கு சென்றிருந்தனர் தமிழ்நாடு 07-06-1985 மற்றும் 08-06-1985 தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்க மாநாட்டில் கலந்து கொள்ள தோழர்கள் சென்னை சென்றிருந்தார்கள். இந்த சூழ்நிலையினை பயன்படுத்தி சிவ. இளங்கோவைச் சேர்ந்தவர்கள் காவல்துறை உதவியுடன் சமூக விரோதிகளை பயன்படுத்தி 07-06-1985 அன்று இரவு காவலரைத் தாக்கி சங்கத்துக்குள் அத்துமீறி நுழைந்தனர்.

தோழர்.எம்.ஆர்.அப்பன் தோழர்.கே.ஆர். சங்கரன் ஆகியோர் வழிகாட்டுதலில் 17.06.1985 பிற்பகல் சமூக விரோதிகளை அப்புறப்படுத்தி சங்க கட்டடத்தை மீட்பது என முடிவு செய்யப்பட்டது. தோழர்.என்.சங்கரன் கட்டடத்துக்குள் முதல் ஆளாக நுழைய வேண்டும் கழுத்தில் விழுவது அரிவாளாக இருந்தாலும் முதல் ஆளாக ஏற்றுக் கொண்டு சங்க கட்டடத்தை கையகப்படுத்த வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. தோழர்கள்.என். சங்கரன், எஸ். ஆறுமுகம், டி.கே சுந்தரபாண்டியன், மீனாட்சிசுந்தரம், ஆர். பாலசுப்பிரமணியன், முத்து முகமது, ரவீந்திரன் இன்னும் பல தோழர்கள் இணைந்து நம் கட்டடம் மீட்கப்பட்டது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தலைவர்கள் 8 பேர்,சிஐடியு தலைவர்கள் 8 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு தோழர்கள்.என்.சங்கரன்,எஸ். ஆறுமுகம்,டி.கே.சுந்தரபாண்டியன், மீனாட்சி சுந்தரம், ரவீந்திரன் மற்றும் சிஐடியு தோழர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

18-06-1985 அன்று அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் தூத்துக்குடியிலும் 24-06-1985 திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பும் எழுச்சி மிக்க ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. 03-07-1985 அன்று அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் 2000 பேர் கலந்து கொண்ட பேரணி பொதுக்கூட்டம் தோழர். என்.சங்கரன் தலைமையில் நடைபெற்றது. தோழர்.எம்.ஆர்.அப்பன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். வழக்கு விசாரணை நடந்த நாட்களில் நூற்றுக் கணக்கான அரசு ஊழியர்கள் நீதிமன்றத்தில் திரண்டதைப் பார்த்து நீதிபதிகளே வியந்து பார்த்தனர்.

தோழர்.என்.சங்கரன் உட்பட தோழர்கள் 11 மாத காலம் தற்காலிகப் பணிநீக்கத்திலிருந்தனர்.

சங்கக் கட்டடத்தைப் பாதுகாக்க தற்காலிகப் பணிநீக்கம், கைது, சிறைச்சாலை மட்டுமல்ல சமூக விரோதிகளுக்கு எதிராக களத்தில் உயிர்த்தியாகம் செய்வதற்குக் கூட தயங்காமல் தோழர்.என்.சங்கரன் உள்ளிட்ட தோழர்களின் தியாகத்தினால் தான் இன்றைக்கும் தூத்துக்குடியில் தோழர்.எம்.ஆர்.அப்பன் இல்லம் அரசு ஊழியர்கள் மற்றும் தொழிலாளர் இயக்கங்களின் போர்ப்பாசறையாகக் கம்பீரமாக எழுந்து நிற்கிறது.

●

## "பஞ்ச்"

மொரப்பா

**அடுத்த தலைமுறைக்காவது கிரிக்கெட்டுக்கு பதிலாக விவசாயத்தை கற்றுக்கொடுங்கள்; ஏனெனில் ஸ்கோரை விட சோறு முக்கியம்!**

# சங்க வரலாற்றில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

## தோற்றம் முதல் இன்று வரை

- மு.அன்பரசு

கேரள மாநிலத்தில், அரசுத் துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்காக மட்டுமின்றி, உழைக்கும் தொழிலாள வர்க்கத்தின் அனைத்து உரிமைகளுக்காகவும் போராடக்கூடிய, போராட்டங்களில் துணை நிற்கக்கூடிய ஒரு அமைப்பாகவும், அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் ஒன்றிணைந்த Federation of State Employees and Teachers Organisations (FSETO) என்ற மிகப்பெரிய கூட்டமைப்பின் முக்கிய அங்கத்தினராக உள்ள கேரளா என்ஜிஓ யூனியன், தன்னுடைய 75ஆம் ஆண்டு வைரவிழாவை கொண்டாடும் சிறப்பு வாய்ந்த இத்தருணத்தில், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் (AISGEF) உதவி பொதுச்செயலாளர் என்ற முறையிலும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் (TNGEA) மாநிலத் தலைவர் என்ற வகையிலும் என்னை அழைத்து இப்பெரும் மாநாட்டில் உரையாற்றிட ஒரு வாய்ப்பை வழங்கியுள்ள நிகழ்ச்சி அமைப்பாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும், கேரள அரசு ஊழியர்கள், ஆசிரியப் பெருமக்கள் உள்ளிட்ட அனைத்து கேரள உழைப்பாள தொழிலாள வர்க்கத்தினருக்கும் நான் எனது நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான்கு நாட்கள் நடந்து கொண்டிருக்கக்கூடிய இந்த மாநாட்டில் ஒரு சிறப்பு அமர்வாக அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் ஆளுமைகளும், உறுப்பினர்களும், பிரதிநிதிகளும் பங்கேற்கும் இந்த அமர்வை வெகு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள நிர்வாகிகள் மற்றும் வரவேற்புக் குழுவினருக்கு எனது வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

கேரளா என்.ஜி.ஓ. யூனியன் பொதுச்செயலாளரிடம் ‘உங்கள் மாநாட்டில் வந்து நான் என்ன பேசுவது?’ என்று கேட்டபோது தமிழ்நாட்டில் அரசு ஊழியர் சங்கம் தோன்றிய விதம் அதன் தற்போதைய நிலை பற்றி பேசுங்களேன், அது கேரள அரசு ஊழியர்களுக்கு உத்வேகமாக இருக்கும் என்றார். தோழர் அப்படி கூறியதும் எனக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தோன்றிய நாளும் அதற்கு முன் சுதந்திர இந்தியாவில் சங்க அமைப்பை தோற்றுவிக்க பல முன்னோடித் தலைவர்கள் மேற்கொண்ட தியாகச் செயல்களும் நினைவில் வந்து சென்றன.

பிரிட்டிஷ் காலத்தில் அரசு ஊழியர்கள் அரசு இயந்திரத்தின் உதிரி பாகங்களாக இருந்ததிலிருந்து, அதன்பின் கிளர்ந்தெழுந்து சங்க அமைப்பை ஏற்படுத்திய வரலாற்றை இப்போது நினைத்தாலும் மலைப்பாகத்தான் இருக்கிறது எனக்கு. இந்தியாவில் சங்க அமைப்புகள் தொடங்கி அவை பிறகு மாநில அளவில் வளர்ந்து பிறகு அகில இந்திய மாநில அரசு ஊழியர் கூட்டமைப்பாக உருப்பெற்று இன்று இந்தியா முழுமையிலும் உள்ள மாநிலங்களை ஒன்றிணைத்து காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை உள்ள அனைத்து மாநிலங்களிலும் பணியாற்றக்கூடிய அரசு ஊழியர்களின் பாதுகாப்பு அரணாக திகழ்வதின் வரலாற்றுப் பின்னணியை இந்த நிகழ்வில் பதிவு செய்வது பொருத்தமானதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

1757ஆம் ஆண்டு மேற்கு வங்கத்தின் கொல்கத்தாவிலிருந்து 150 கி.மீ.வடக்கே பாகீரதி நதிக்கரையோரத்தில், பிளாசி என்ற இடத்தில் வங்காள நவாப்புடன் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி போரிட்டு வென்றபின் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியை

நிறுவுவதற்கான நடவடிக்கைகள் பிரிட்டிஷ் அரசால் முடுக்கி விடப்பட்டது.

1800களின் ஆரம்ப ஆண்டுகளில் இந்தியர்கள் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியில் குமாஸ்தாக்களாகவும், சேவகர்களாகவும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இந்திய சிப்பாய்கள் கிழக்கிந்திய கம்பெனியில் ஒழுங்கை பராமரிக்கவும், கிழக்கிந்திய கம்பெனி நிறுவனங்களைப் பாதுகாக்கவும் பணியமர்த்தப்பட்டனர். இந்திய சிப்பாய்கள் பிரிட்டிஷ் இராணுவ வலிமைக்கு தாங்கள் பெருமை சேர்ப்பதாக எண்ணி ஆங்கிலேயே அதிகாரிகளுக்கு மிகுந்த விசுவாசமாயிருந்தனர்.

ஆனால் 1830-40களில் ஆங்கிலேயர்கள் இந்தியர்களை கிறிஸ்துவர்களாக மதமாற்றம் செய்வதாக செய்திகள் கிளம்பியதால் இந்து சிப்பாய்களும், முஸ்லிம்கள் வெறுக்கும் பன்றியின் கொழுப்பை தோட்டாக்களில் தடவச்சொல்லி பிரிட்டிஷ் அரசு நிர்பந்தித்ததை முஸ்லிம் சிப்பாய்கள் தங்களுக்கு நேர்ந்த பெருத்த அவமானமாகக் கருதியதாலும், சிப்பாய் கலகம் வெடித்தது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆறு மாதங்களுக்கு மேலாக நடந்த இந்த புரட்சியில் ஈடுபட்ட பெரும்பாலான சிப்பாய்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த புரட்சிதான் முதல் இந்திய சுதந்திரப் போர் எனப் பெயர் பெற்றது. இந்நிகழ்வுக்குப் பின்னர் இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து பிரிட்டிஷ் அரசாங்கமே 'விக்டோரியா மகாசாசனம்' மூலம் ஏற்றுக்கொண்டது. அதன்பிறகு ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியில் வேலை பார்த்த குமாஸ்தாக்களும், சேவகர்களும் அரசு ஊழியர்களாக உருமாற்றம் பெற்றனர்.

இந்தியாவை தன் நேரடிப் பொறுப்பில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்றுக் கொண்ட பின்னர் அதன் ஆதிக்க விரிவாக்கத்தின் தேவையை ஒட்டி, பரந்துபட்ட இந்திய நாட்டை அடக்கியாள அரசு இயந்திரம் விரிவாக்கப்பட்டது. இந்த வளர்ச்சிப் போக்கில், பிரிட்டிஷ் பாரம்பரிய அடித்தளத்தில் உருவானதுதான் இந்திய பொதுப்பணி அமைப்பு முறை (Indian Civil (or) Public Service System) ஆகும்.

காலப்போக்கில் காரன்வாலிஸ் பிரபுவின் முயற்சியால், வருவாய் வசூல் பொறுப்புகளை நிறைவேற்றிட கலெக்டர்களும், சிவில் மற்றும் கிரிமினல் தாவாக்களுக்கு தீர்வு காண நீதிபதிகளும் நியமனம் செய்யப்படும் புதிய முறை அமலானது. இந்த பொதுப்பணி அமைப்பு முறையின் நோக்கம் நல்லவர்களை பாதுகாப்பது மற்றும் தவறு செய்பவர்களை தண்டிப்பதாக இருந்த போதிலும், நிர்வாக அதிகாரம் படைத்த உயர் பதவிகள் அனைத்தையும் ஆங்கிலேயர்களே வைத்துக் கொண்டனர்.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கொடும் சுரண்டலும், கடும் அடக்குமுறைகளும், பெரும் பஞ்சங்களும் மக்களை மிகவும் பாதித்தன. இதனால் ஏற்பட்ட கொந்தளிப்புகளில் விடுதலை உணர்வுகள் மேலோங்கி நின்று அவை போராட்டங்களாக உருப்பெற்றன. அரசு நிர்வாகத்தில் இந்திய மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் அரசாங்கத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது என்ற நிதர்சனம் பிரிட்டிஷ் அரசுக்கு தெரிந்தது. அதனால், 1865 ஆம் முனிசிபல் போர்ட் சட்டமும், 1882ம் ஆண்டு டிஸ்ட்ரிக்ட் போர்ட் சட்டமும் கொண்டுவரப்பட்டன. இந்த சட்டங்களும் இந்திய மக்களுக்கு போதுமான உரிமைகளை வழங்குதாக இல்லை.

பிரிட்டிஷ் இதனால் வளர்ந்து கொண்டிருந்த இந்திய மக்களின் கோபத்தை சமாளிக்க இந்திய அரசுப் பதவியில் இருந்த ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் மற்றும் வெட்டர்பர்ன் ஆகிய இரண்டு ஆங்கிலேயர்களையும், தாதாபாய் நௌரோஜி மற்றும் சுரேந்திர பானர்ஜி என்ற இரண்டு இந்தியர்களையும் வைத்து 1885ல் இந்திய தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த ஏற்பாடும் கூட ஒரு ஏமாற்று வேலை என புரிந்துகொண்ட இந்திய மக்கள் வீதிக்கு வந்து விடுதலை கேட்டு போராட்டங்கள் நடத்தினர். 1890ல் கவர்னர் ஜெனரல், அரசு ஊழியர்கள் இந்திய விடுதலைப் போராட்ட இயக்கங்களில் ஈடுபடக்கூடாது என தடைவிதித்து உத்தரவிட்டார். இந்த உத்தரவைத் தொடர்ந்தும் விடுதலைப் போராட்டங்கள்

வீறுகொண்டு எழுந்ததாலும், அரசு ஊழியர்கள் விடுதலைப் போராட்டங்களுக்கு மறைமுகமாக ஆதரவளித்து வந்ததாலும், அலுவலக நேரம் தவிர்த்த மற்ற நேரங்கள், விடுமுறை நாட்களில் போராட்டங்களுக்கான ஆயத்த வேலைகளை செய்து கொடுத்து உதவி வந்ததாலும், 1904ம் ஆண்டு அரசு ஊழியர்களுக்கான நன்னடத்தை விதிகள் உருவாக்கப்பட்டு, அவர்களது ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு, அவர்கள் அரசு இயந்திரத்தின் உதிரி பாகங்களாக ஆக்கப்பட்டார்கள். அவர்கள் போராட்டங்களில் ஈடுபடவும் போராட்டக்காரர்களுக்கு உதவவும் தடை விதிக்கப்பட்டதோடு, அரசு ஊழியர்களின் குடும்பத்தில் எவரேனும் அரசியல் இயக்கத்தில் ஈடுபட்டால் அதுகுறித்து அரசுக்கு தகவல் தரவேண்டியது அவர்களது கடமை (!) என்ற நிர்ப்பந்தமும், அவர்கள் இந்தியாவின் அரசியல் இயக்கங்கள் சார்ந்த அமைப்புகளுக்கு நிதியளிப்பது சட்டவிரோதமானது என்ற அச்சுறுத்தலும் ஏற்படுத்தப்பட்டது.

முதலாளித்துவ நாடுகள் தங்களது சந்தைகளை விரிவாக்கும் நோக்கத்துடன் 1914ல் யுத்தத்தில் ஈடுபட்டனர். 1914 முதல் 1918 வரை நடந்த முதல் உலகப் பெரும் போரில் பதுக்கல், பற்றாக்குறை, விலை உயர்வு போன்றவற்றால் முதலாளிகள் கொள்ளை லாபம் பெற்றனர். மறுபுறம் விலை உயர்வால் வாங்கும் சக்தி குறைந்து உழைப்பாளி மக்களின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடைந்தது. இதனால் பரவலாக வெகுஜனப் போராட்டங்களும், கிளர்ச்சிகளும் வெடித்தன. முதல் உலகப் பெரும்போர் நடந்து கொண்டிருந்த காலத்திலேயே ரஷ்ய நாட்டில் மாபெரும் புரட்சி நடந்து தோழர் லெனின் தலைமையில் தொழிலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியது. இது உலகளாவிய அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. உலகெங்கும் செயல்பட்டுக்கொண்டிருந்த விடுதலை இயக்கங்களுக்கும், உழைப்பாளி மக்களுக்கும் இது பெரும் உத்வேகத்தை அளித்தது.

முதல் உலகப் போரின் முடிவில் ‘சர்வதேச சங்கம்’ (League of Nation) உருவானது. அதன் அமைப்புகளில் ஒன்றாக ‘சர்வதேச தொழிலாளர் அமைப்பு’ (Internatinal Labour Organisation) உருவாக்கப் பட்டது. இந்த இரு அமைப்புகளும் உழைப்பாளி மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான பல்வேறு கோட்பாடுகளை வகுத்தன. இதன் அமைப்புக் கூட்டத்தில் ’சட்டபூர்வமான தேவைகளுக்காக தொழிலாளர்கள் சங்கம் அமைத்துக் கொள்ளலாம்’ என்ற சங்கம் அமைக்கும் உரிமையும், ஓய்வூதியத் திட்டமும் முக்கிய தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் முடிவை பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டு தொழிலாளர்கள் சங்கம் அமைத்துச் செயல்படத் தடையில்லை என்று அறிவித்தாலும் அந்த அறிவிப்பிற்குப் பின் இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் பல்வேறு சங்கங்கள் உருவாயின. நாம் இன்றைக்கு புரிந்து கொள்ளும் பொதுவான ஓய்வூதியம் என்பது ஆங்கிலேயர்கள் காலத்திலேயே இந்தியாவில் வருவாய்த்துறை, காவல்துறை மற்றும் பொதுப்பணித்துறையினருக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்தது.

முதல் உலகப்போரின் முடிவில் உருவாக்கபப்பட்ட சர்வதேச சங்கமும் அதன் துணை அமைப்பாக உருவாக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமும், ஒரு தொழிலாளி வயது முதிர்வின் அடிப்படையில் பணியாற்ற முடியாமல் பணி ஓய்வு பெறும்போது அவனுடைய எஞ்சிய வாழ்நாளை நடத்திச் செல்வதற்கான சேமிப்புத் தொகையை அத்தொழிலாளி பெறுவதற்காக வைப்புநிதித் திட்டத்தை செயல்படுத்தியே ஆகவேண்டிய கட்டாயத்தை உருவாக்கின. இந்த திட்டத்தில் உழைப்பாளி மட்டும் சந்தாவை செலுத்துவதோடு நின்றுவிடாமல் அவனது உழைப்பால் ஆதாயம் அடைந்த நிர்வாகம் அவனுடைய வருங்கால சேமிப்புக்கான பங்களிப்பை செலுத்த வேண்டும் என்றும் விதி வகுக்கப்பட்டது.

1930களில் உலகம் எதிர்கொண்ட கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஜே.எம்.கெயின்ஸ் என்ற பொருளியல் அறிஞர் பொதுச் செலவின கோட்பாடு ஒன்றை ஏற்படுத்திக் கெடுத்தார். அதன்படி, மக்களின் வாங்கும் சக்தியை அதிகப்படுத்துவதன் மூலம் பொருளாதார தேக்கத்திலிருந்து நாடுகளை

விடுவிக்கலாம் என்றும், அதற்கு நலத்திட்டங்களை செயல்படுத்திட அரசுத்துறைகளில் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் வரையறுக்கப்பட்டது. இத்தகைய பொதுச் செலவினங்களை மேற்கொள்ளக்கூடிய அரசுகள் சேமநல அரசுகள் என அழைக்கப்பட்டன. அத்தகைய அரசுகள் தங்கள் ஊழியர்களுக்கு பங்களிப்பு வைப்புநிதி திட்டத்தோடு கூடிய சேமிப்பு திட்டங்களை முன்வைத்தது. இதன்மூலம் தொழிலாளி அல்லது ஊழியர் செலுத்தும் சேமநலத் தொகைக்கு ஈடாக அரசும் தன் பங்களிப்பைச் செலுத்தி வந்தது.

இந்தியாவில் முதலாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளின் விளைவாக ஊழியர்களுக்கான பங்களிப்பு சேமநல திட்டம் என்பது பொது சேமநலத்திட்டமாக மாற்றிமைக்கப்பட்டது. அதாவது ஊழியர்கள் செலுத்தும் சேமநலத் தொகைக்கு ஈடாக அரசு செலுத்த வேண்டிய பங்களிப்பை, ஓய்வூதியம் வழங்குவதன் காரணமாக சேமநல நிதிக்கு அரசு சமமான பங்களிப்பு செலுத்துவதிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டது.

புதிதாக விடுதலையடைந்த தேசத்தில், நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கும் நலத்திட்டங்களுக்கும் தேவையான நிதியை கருத்தில் கொண்டு அனைத்து ஊழியர்களுக்கும் சேமநல நிதிக்கான பங்களிப்பு செலுத்துவதற்குப் பதிலாக ஓய்வுபெறுபவர்களுக்கு மட்டும் ஓய்வூதியம் வழங்குவதன் மூலம் கணிசமான தொகையை அரசு செலவினங்களுக்கு பயன்படுத்த முடிந்தது. இவ்வாறு ஊழியர்களுக்கான அரசின் வைப்புநிதி பங்களிப்பை நிறுத்திக் கொண்டதால், கடந்த 69 ஆண்டுகளில் இரண்டு கோடி ஊழியர்களுக்குச் சேர வேண்டிய பல இலட்சம் கோடி ரூபாய்களை அரசு எடுத்துக் கொண்டுதான் ஓய்வூதியம் கொடுத்தது, கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அரசு ஊழியர்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

பிரிட்டிஷ் இந்திய அரசு, அரசுப்பணியில் இருந்தவர்களிடையே ஆங்கிலேயர் - இந்தியர் என்ற பாகுபாட்டை கடைபிடித்தது. ஊதியம், பதவி உயர்வு, பென்ஷன் போன்றவை மேல்மட்ட அதிகாரிகளுக்கு மேலும் மேலும் அதிகரித்து கொடுக்கப்பட்டது. அடிமட்டத்திலிருந்த ஊழியர்களின் வாழ்க்கை நிலை மேம்பட எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் என்.ஜி.ஓ.வின் ஊதியம் ரூ.17.50, ரூ.20, ரூ.30 என்ற நிலையிலேயே நீண்டகாலாலமாக இருந்து வந்தது. இந்த துயரமான நிலையிலிருந்து விடுபட சங்கம் தேவை என்ற உணர்வு மேலோங்கி வந்த நிலையில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) தீர்மானத்தின்படி, சங்கம் அமைத்துக்கொள்ள தடையில்லை என்று அரசு பிரகடனப்படுத்தியது. இதன் வெளிப்பாடாக 31.1.1920ஆம் தேதி என்.ஜி.ஓ. சங்கம் Madras Non Gazetted Officials Association என்ற பெயரில் உருவானது.

1924ல் மெட்ராஸ் அரசாங்கம் என்.ஜி.ஓ. சங்கத்திற்கு அங்கீகாரம் அளித்தது. இதில் அரசு செயல் அதிகாரிகள், காவல்துறையினர், சிறைத்துறையினர், கடைநிலை ஊழியர்கள் தவிர்த்து மற்றவர்கள் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

இரண்டாம் உலகப்போர் 1939ல் தொடங்கி ஆறு ஆண்டுகள் நடந்து 1945ல் முடிவுக்கு வந்தது. அந்நேரத்தில் பிரிட்டிஷ் ஐக்கிய ராஜ்ஜியத்தில் பிரதம மந்திரியாக புதிதாக பொறுப்பேற்றிருந்த தொழிலாளர் கட்சியின் தலைவர் கிளமெண்ட் ரிச்சர்ட் அட்லிக்கு இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்கிவிட வேண்டும் என்ற சிந்தனை ஏற்பட்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர் தன் இந்திய அதிகாரிகளைப் பணித்தார். இந்தியாவிற்கு முழு சுதந்திரம் கொடுப்பதற்கு முன் 1946ல் பிரிட்டிஷ் அரசு, ஒரு இடைக்கால ஏற்பாடாக ஜவஹர்லால் நேரு தலைமையில் இந்தியாவின் அரசாங்கத்தை நிறுவிக் கொள்ள அனுமதித்தது.

ஜவஹர்லால் நேருவை பிரதமராகக் கொண்டு அமைந்த இந்திய அரசு, சுதந்திர இந்தியாவில் மேற்கொள்ள வேண்டிய பல சீர்திருத்தங்களுக்கு அப்போதே அடிகோலியது. அரசாங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கௌரவமான

ஊதியம் உறுதிபடுத்தப் பட்டால்தான் நிர்வாகம் செம்மையாக நடக்கும் என்ற அடிப்படை ஆட்சித் தத்துவத்தை அது உணர்ந்திருந்தது. பிரிட்டிஷ் இந்தியாவில் அரசு அலுவலங்களில் பணியாற்றிய ஊழியர்கள் சொற்ப ஊதியத்தில் பணியாற்றி வந்ததால் அவர்களுக்கு சரியான ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று இந்தியாவின் இடைக்கால அரசாங்கம் கருதியது. அதனால் வாழ்வூதியத்தின் (living wages) அடிப்படையில் மத்திய அரசு ஊழியர்களின் ஊதியத்தை நிர்ணயிக்க, நீதிபதி சீனிவாச வரதாச்சாரியா என்பவரின் தலைமையில் முதலாம் ஊதியக்குழு 1946ம் ஆண்டு மே மாதத்தில் அமைத்தது.

இதன் வரம்பிற்குள் மாநில அரசு ஊழியர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மாநில அரசு ஊழியர்களின் ஊதியம் குறித்து மத்தியிலோ மாநிலத்திலோ எவ்வித அசைவுகளும் இல்லாத நிலையில் மேற்படி கோரிக்கையை வலியுறுத்தி 8.8.1946ல் சென்னையில் 10,000 பேர் பங்கேற்ற பேரணி நடந்தது. 25.8.1946ம் தேதி கிண்டி பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற மாநில மாநாட்டில் அரசுக்கு ஒரு மாதகால அவகாசத்தில் காலவரையற்ற வேலைநிறுத்த அறிவிப்பு கொடுக்க தீர்மானம் இயற்றப்பட்டது.

மத்திய அரசின் முதலாம் ஊதியக்குழுவின் பரிந்துரைகள் வெளியிடப்பட்ட பின். மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள விகிதங்களும், பஞ்சப்படியும், மத்திய அரசு சம்பள விகிதங்களோடு ஒப்பிட்டபோது மிகவும் குறைவானதாக இருந்தன. இதனால் சம வேலைக்கு சம ஊதியம் என்ற கோரிக்கை எழும்பியது.

சென்னை சட்டமன்றத்தில் அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் குறித்து பேச எம்.எம்.அன்வர், முகமது இஸ்மாயில் ஆகிய சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்டுவந்த ஒத்திவைப்பு தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் டிசம்பர் 15, 1947 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் அறிவித்து ஊழியர்கள் போராட்டத்தில் குதித்தனர். பேச்சுவார்த்தையின் மூலம் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பதிலாக அரசு சங்கத்தின் அங்கீகாரத்தை ரத்து செய்தது. 144 தடை உத்தரவு பிறப்பித்து சங்கக் கூட்டங்களுக்கு தடை விதித்தது. சங்கத் தலைவர்களை அத்தியாவசியப் பணிகள் (எஸ்மா) சட்டத்தின் கீழ் கைது செய்தது. போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் மீது தடியடியும், கண்ணீர்புகை குண்டுகளும் வீசப்பட்டன. சங்கத் தலைவர்கள் உட்பட சங்கத்தின் முன்னணி ஊழியர்களும் நூற்றுக்கணக்கில் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

பல தொழிற்சங்கங்களும், கம்யூனிஸ்ட் கட்சியும், சோசலிஸ்ட் கட்சியும் அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக இருந்ததால் அவற்றின் தலைவர்கள் சிலரும் கைது செய்யப்பட்டனர். வேலை நிறுத்தத்திற்கு எதிரான பிரச்சாரம் பத்திரிகைகளின் மூலம் தீவிரப் படுத்தப்பட்டது. நாடு சுதந்திரமடைந்த உடனே நடத்தப்பட்ட போராட்டம் என்பதால் அரசுக்கு மக்களின் ஆதரவு வெகுவாக இருந்தது. அது போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஊழியர்களுக்கு பாதகமாக அமைந்தது. புதிய ஆட்சியாளர்கள் ஜனநாயக முறைப்படி நடந்து கொள்வார்கள் என்ற அரசு ஊழியர்களின் எதிர்பார்ப்புகள் தவிடுபொடியாயின.

கொள்கையில் பிடிப்பில்லாத ஒரு சில தலைவர்களினால் வேலை நிறுத்தம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. சங்கத் தலைவர்களுக்குள்ளேயே ஒருசிலர் அரசுடன் ரகசிய பேச்சுவார்த்தை நடத்தி டிசம்பர் 22, 1947ம் தேதி முதல் வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டது. சம வேலைக்கு சம ஊதியம் என்ற அடிப்படையில் அரசு ஊழியர்களின் சமூக அந்தஸ்தையும் கௌரவத்தையும் உயர்த்த எடுக்கப்பட்ட முயற்சி இப்படியாகத் தோற்கடிக்கப்பட்டது.

சங்கத்தில் ஊழியர்கள் நலனுக்காக பாடுபட்டவர்கள் மீது பழிவாங்கல் நடவடிக்கையாக பணியிறக்கம், வருடாந்திர ஊதிய உயர்வை நிறுத்தி வைத்தல், தற்காலிக ஊழியரை பணி நீக்கம் செய்தல் போன்ற அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. தோழர் ஜெகதீச ஐயர் பணி நீக்கம்

செய்யப்பட்டார். துயரும், அவ நம்பிக்கையும் அரசு ஊழியர்கள் எல்லோரையும் பீடித்துக் கொண்டதால், சங்க நடவடிக்கைகள் சீர் குலைந்தன.

1952-1956 காலகட்டத்தில் மாநிலங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்ட போது சென்னை மாகாணத்தில் இருந்த சில பகுதிகள் ஆந்திரா, கர்நாடகா, கேரளா மாநிலங்களுடன் இணைக்கப்பட்டன. சென்னை மாகாணத்தில் இருந்த விசாகபட்டினம் ஆந்திராவுடன் இணைந்ததால் அங்கிருந்த ஊழியர்கள் ஆந்திர மாநில என்.ஜி.ஓ.சங்கம் அமைத்துக் கொண்டனர். மலபார் கேரளத்துக்கும், தென்கரா கர்நாடகத்திற்கும் கொடுக்கப்பட்ட நிலையில் மீதமிருந்த பகுதி தமிழ்நாடு என்.ஜி.ஓ. சங்கமாக செயல்பட ஆரம்பித்தது.

இந்தியா முழுவதிலும் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு முறையில் தொழிலாளர்களுக்கு ஊதிய முறைகள் நியாயமற்ற வகையில் பின்பற்றப்பட்டு வந்த நிலையில் நாடுமுழுவதிலும் ஒரே மாதிரியான ஊதிய முறை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் வலியுறுத்த ஆரம்பித்தன.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் 43வது பிரிவில் கூறப்பட்ட வாழ்க்கை ஊதியமும் (Living Wage) நியாய ஊதியக்குழுவால் வரையறுக்கப்பட்ட நியாய ஊதியமும் (Fair Wage) வழங்கப்படாத நிலையில், 1957ல் கூடிய 15வது இந்திய தொழிலாளர்களின் முத்தரப்பு மாநாடு (அரசு, முதலாளிகள், தொழிலாளர்கள் பங்கேற்ற மாநாடு) இந்திய தொழிலாளர்களுக்கு தேவை அடிப்படையிலான குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்பட வேண்டும் என ஒரு மனதாக முடிவாற்றியது.

இதனடிப்படையில் தேவை அடிப்படையிலான குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்வதற்கு டாக்டர் அக்ராய்டு என்ற உணவியல் நிபுணர் தலைமையிலான குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் அளவீடுகள் நிர்ணயிக்கப்பட்டன. இந்த வரையறைகளை உச்சநீதிமன்றம், யூனிச்சோய் மற்றும் பலர் -எதிர்-கேரள அரசு அடிப்படை (1962 AIR 12) என்ற வழக்கில் 1961ம் ஆண்டு உறுதி செய்தது.

அதன்பிறகு ரெப்டகாஸ் பிரட் நிர்வாகம் எதிர்- அதன் தொழிலாளர்கள் (1992 AIR 504) வழக்கில், உச்சநீதிமன்றம், ஒரு தொழிலாளியின் குறைந்தபட்ச ஊதியத்தில் ஆறாவது விதிமுறையாக “குழந்தைகளின் கல்வி, மருத்துவ சிகிச்சை, மனமகிழ்வுகள், பண்டிகை மற்றும் விழாக்கள் ஆகியவற்றுக்காக 25 சதவீதம் நடைமுறையில் இருக்கும் குறைந்தபட்ச ஊதியத்தில் சேர்க்க வேண்டும்” என்று உத்தரவிட்டது. உழைக்கும் மக்களின் கௌரவமான வாழ்க்கைத் தரத்திற்கான சமுதாய கட்டமைப்பை உருவாக்க அரசியலமைப்பு சட்டத்தின் 43வது திருத்தம் உறுதியளித்துள்ளது. தொழிலாளர்கள் அனைவரும் இச்சிறந்த கொள்கையை நம்பிக்கை யோடு எதிர்பார்த்து காத்துக்கிடக்கின்றனர். ஆனால் அடுக்கப்பட்ட உறுதிமொழிகள் எதுவும் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை என்பது தொழிலாள வர்க்கத்திற்கு அரசாங்கங்கள் இழைத்து வரும் மாபெரும் அநீதியாகும்.

மத்திய அரசாங்கம் 1957 ஆகஸ்டில் மத்திய அரசு ஊழியர்களுக்கான இரண்டாவது ஊதிய மாற்றக்குழுவை திரு.ஜெகந்நாத் தாஸ் தலைமையில் அமைத்தது. இதனை சுட்டிக்காட்டி தமிழக அரசு ஊழியர்களுக்கு மாநில அரசு தனியே ஊதியக்குழு அமைத்து ஊதிய மாற்றம் செய்ய வேண்டுமென்ற சம்பள சமன்பாட்டிற்கான கிளர்ச்சிகள் நடந்தன. இதனால் ஏற்பட்ட விளைவுகளால் அரசு 1959ம் ஆண்டு முதலாவது சம்பளக் கமிஷனை நியமிக்க வேண்டியதாயிற்று. இதன் மூலம் மத்திய மாநில சம்பள விகிதங்களுக்கிடையேயான இடைவெளி குறைக்கப்பட்ட சிறு நன்மை நடந்ததேயொழிய மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் கிடைக்கவில்லை.

1960ல் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் (AISGEF) உருவாக்கப்பட்டது. அதன் பிறகு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம், அகவிலைப்படி போன்றவை தமிழ்நாட்டு அரசு ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற ஆரம்பித்தது. பல கட்ட போராட்டங்களுக்குப் பின் 1964ல் தமிழக அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான

அகவிலைப்படி என்ற கோரிக்கை மட்டும் வென்றெடுக்கப்பட்டது. ஆக தமிழக அரசு ஊழியர்கள் முதலாவது ஊதியமாற்றக்குழுவை அமைக்கவே மாநில அரசுடன் ஒரு நீண்ட நெடிய போராட்டம் நடத்த வேண்டியிருந்தது. அதுவும் மத்திய அரசு ஊழியர்களுக்கு இரண்டாவது ஊதிய மாற்றம் செய்யப்பட்ட நிலையில் தமிழக அரசு ஊழியர்கள் முதலாவது ஊதிய மாற்றத்தை போராடிப் பெற வேண்டியிருந்தது.

1967ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 8 மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தது. அப்போது தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி அமைத்தது. புதிய ஆட்சி, புதிய நிர்வாகம் என்பதால் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தங்களது கோரிக்கைகளுக்கு விடிவு ஏற்படும் என நம்பினர். இதன் காரணமாக அரசு ஊழியர் ஆசிரியர் மத்தியில் தி.மு.க.வின் செல்வாக்கு அதிகரித்தது. என்.ஜி.ஓ.சங்கத் தலைமை அரசியல் சார்பின்மை என்ற நிலையிலிருந்து விலகி ஆட்சியாளர்களுக்கு வெளிப்படையான ஆதரவுடன் செயல்பட ஆரம்பித்தது. ஊழியர்களை ஒன்றுதிரட்டுவதற்கு பதிலாக ஆட்சியாளர்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்தியது. இதனால் சங்கம் கட்டுக்கோப்பையும், போர்க்குணத்தையும் இழந்து, ஊழியர்களிடையே சங்க உணர்வு மங்க ஆரம்பித்தது.

1969ல் தமிழக முதல்வராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் மரணமடைந்த நிலையில் கருணாநிதி முதல்வரானார். அப்போது இரண்டாவது ஊதியக்குழு அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைகள் 2.10.1970 முதல் அமலுக்கு வந்தது. 2வது ஊதியக்குழு பரிந்துரைகளில் ஏராளமான முரண்பாடுகளும். குளறுபடிகளும் இருந்தன. எதிர்பார்த்த பலன் கிடைக்காததால் அதிருப்தியடைந்த ஊழியர்கள் மத்தியில் கடும்கோபம் நிலவியது.

குறைபாடுகளை களைவதற்கான போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட முன்வராமல் சங்கத்தலைமை அரசின் விசுவாசியாக மௌனமாக இருந்தது. 1971ல் கோரிக்கைகளுக்காக போராட வேண்டுமென்று செயல்பட்டு வந்தவர்கள் சிவ.இளங்கோ தலைமையில் தனி அணி அமைத்து போட்டியிட்டு அரசின் விசுவாசியாக இருந்த சங்கத் தலைமையை தோற்கடித்தனர். இதில் தோழர் ஜே.எஸ்.பரதன் அவர்கள் துணைத்தலைவராகவும், தோழர் எம்.ஆர். அப்பன் அவர்கள் பொருளாளராகவும் தேர்வாயினர்.

சிவ.இளங்கோவின் தலைமையில் செயல்பட்ட என்.ஜி.ஓ.சங்கமும் அகவிலைப்படி, போனஸ் போன்ற கோரிக்கைகளுக்காக போராட முன்வராமல் அரசிடம் கெஞ்சியும் முதல் வரை வானளாவப் புகழ்ந்தும் அரசுக்கு ஆலவட்டம் சுற்றியது. தலைமையின் இந்தப் போக்கை தோழர்கள் ஜே.எஸ்.பரதன், எம்.ஆர்.அப்பன் போன்றோர் கடுமையாக எதிர்த்தனர். அரசு ஊழியர்களுக்கான உரிமைகளை போராடிப் பெறவேண்டுமேயொழிய யாசகம் கேட்டு பெறக்கூடாது என தொடர்ந்து சங்கத் தலைமையை எதிர்த்து பேசிவந்தனர். இதனால் சங்கத்தைலைமை இவர்கள் இருவரையும் சங்கத்திலிருந்து தற்காலிக நீக்கம் செய்தது. கண்டித்த மாவட்ட கிளைகள் கலைக்கப்பட்டன.

சங்கத் தலைமையின் சர்வாதிகாரப்போக்கை சரிசெய்ய 1973 ஜூன் மாதத்தில் என்.ஜி.ஓ.நடவடிக்கைக்குழு உருவாக்கப்பட்டு அதன் தலைவராக தோழர் கூடலிங்கம் அமைப்பாளராக தோழர் எப்.எம்.குத்புதீன் செயலாளராக தோழர் எம்.ஆர்.அப்பன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். நடவடிக்கைக் குழு அரசு ஊழியர்களின் உரிமைக்காக சம்பள மறுப்பு போராட்டம் பஞ்சப்படி கேட்டு உண்ணாவிரதம் போன்ற பல போராட்டங்களை நடத்தியது. 1981ல் அரசு ஊழியர் நடத்தை விதிகள் திருத்தப்பட்டு. உறுப்பினர்களை சங்கத்தில் சேர்க்க, ஊர்வலம் நடத்த, உண்ணாவிரதம் இருக்க தடைகள் விதிக்கப்பட்டு அரசு ஊழியர்கள் மீது அடுக்கடுக்கான தாக்குதல்களை அரசு தொடுத்தது.

இவற்றை எதிர்த்து போராட வேண்டிய சங்கத் தலைமை, மாறாக அரசிடம் சரணாகதி

அடைந்தது. 1982ல் மறியல் போரட்டத்தில் ஈடுபட்ட 528 அரசு ஊழியர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்கள் 18 மாதகாலம் தற்காலிக பணி நீக்கத்தில் இருந்தனர். இவர்களை பாதுகாக்க சங்கத் தலைமை எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

அரசு ஊழியர்களின் நலன்கள் இக்கால கட்டத்தில் யாராலும் பாதுகாக்கப்படவில்லை. இந்நிலையில் ஊழியர்களின் உரிமைகளுக்காகப் போராடவும், அவர்களின் கோரிக்கைகளை வென்றெடுக்கவும் புதியதொரு அமைப்பை ஏற்படுத்துவது அவசியமாயிற்று. இந்த லட்சியங்களுக்காக 1984 மே 6ம் தேதி மதுரையில் பெருவாரியான ஊழியர்கள் பங்கேற்ற கூட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உதயமானது.

தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடிய போராட்டங்களில் பிரம்மாண்டமானது 22.6.1988ஆம் தேதியிலிருந்து 31 நாட்கள் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டம். அன்றைய தேதியில் பணியில் இருந்த தமிழக அரசு ஊழியர்களோ, ஆசிரியர்களோ அவ்வளவு சீக்கிரம் மறந்து விட முடியாது. 8 லட்சம் அரசு ஊழியர்-ஆசிரியர்கள் பங்கேற்று வரலாறு படைத்த 31 நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தின் விளைவாக மத்திய அரசுக்கு இணையான ஊதியம், ஒருமாத ஊதியம் போனஸ் ஆகியவற்றைத் தர தமிழக அரசை ஒப்புக்கொள்ள வைத்த வரலாற்றுச் சிறப்பு மிக்க போராட்டம்.

மறக்கமுடியாத இன்னொரு போராட்டம் 2003ல் அரசு ஊழியர்-ஆசிரியர்கள் மீண்டும் ஒன்றுகூடி நடத்திய காலவரையற்ற போராட்டம். அரசு ஊழியர்கள் போராட்டங்களில் ஈடுபட்டால் எஸ்மா, டெஸ்மா உள்ளிட்ட அனைத்துச் சட்டங்களும் பாயும் என்று சொன்ன அன்றைய முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களின் மிரட்டலுக்கு பயப்படாமல் அவரின் அரசை எதிர்த்து நின்று போராடிய போராட்டம். கோபமுற்ற ஜெயலலிதா ஒரே அரசாணையில் ஒரு இலட்சத்து 76 ஆயிரம் பேரை டிஸ்மிஸ் செய்தபோதும் மனம் தளராமல் நின்று போட்ட அரசாணையை திரும்பப்பெற வைத்த போராட்டம்.

இந்த காலகட்டத்தில் டிஸ்மிஸ் செய்யப்பட்ட அரசு ஊழியர்களின் இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு அவர்கள் மீளப்பணியில் சேரும் காலம் வரை நிதியுதவியும், பொருளுதவியும் கொடுத்து பாதுகாத்த மாநிலங்களில் கேரளா அரசு ஊழியர்களின் பங்கு மகத்தானதாகும். ஊழியர்களிடமிருந்து பல இலட்சக்கணக்கான ரூபாய்களை திரட்டி, தமிழ்நாட்டில் டிஸ்மிஸ் செய்யப்பட்ட அரசு ஊழியர்களின் வாழ்வாதாரங்களை கேரளா NGO யூனியன் காத்ததை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும், அரசு ஊழியர்களும் என்றும் மறக்க மாட்டார்கள்.

கேரள அரசு ஊழியர்களின் ஆசிரியர்களின் இந்த உதவிதான் நாங்கள் எங்கள் சங்கத்தை முன்னேற்ற வழி நடத்துவதற்கு உறுதியையும் உத்வேகத்தையும் அளித்துள்ளது. தமிழ்நாட்டில் அரசு ஊழியர் சங்கம் எந்த ஒரு கடுமையான போராட்டத்தையும் மிகவும் துணிச்சலாகவும், உறுதியுடனும் முன்னெடுக்க காரணம் கேரள அரசு ஊழியர்கள், ஆசிரியர்களும் அதைப்போன்று பல மாநிலங்களில் உள்ள அரசு ஊழியர், ஆசிரியர்களும் தான் என்றால் அது மிகையில்லை.

மாநிலங்களுக்கு இடையே உள்ள அரசு ஊழியர் சங்கங்களை சங்கிலி போல் ஒன்றிணைத்து இந்தியா முழுமையிலும் உள்ள அரசு ஊழியர்களிடையே நல்லதொரு இணைப்பையும் பிணைப்பையும் ஏற்படுத்தி அவர்தம் நலன்களைக் காப்பதில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் (AISGEF) பங்கு மகத்தானது என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டியது அவசியமானதாகும்.

அதன்பிறகு செல்வி ஜெயலலிதாவின் அரசாங்கத்தை, மக்கள் சந்திப்பு பிரச்சாரம், வாகனப் பிரச்சாரம், மாவட்டந்தோறும் பிரச்சாரம் என பலகட்ட இயக்கங்களை நடத்தி அடுத்த தேர்தலில் அவர் தோற்றுப் போகத் தொண்டாற்றி ‘பகை முடிக்கும் பணி முடித்த’

போராட்டம். அது அரசு ஊழியர்களைப் பற்றிய அவருடைய அபிப்பிராயத்தை மாற்ற வைத்தது. அதனால் 2011ல் தேர்தல் அறிக்கையில் தான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் புதிய பென்சன் திட்டம் திரும்ப பெறப்பட்டு பழைய பென்சன் தொடர வழிவகை காணப்படும் என்றும் தொகுப்பூதியம், மதிப்பூதியம். சிறப்பு காலமுறை ஊதியம் போன்ற கூலிமுறைகள் ஒழிக்கப்பட்டு முறையான காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார்.

அதன்பேரில் அவருக்காக வாக்களித்து நாலரை வருடங்கள் காத்திருந்த அரசு ஊழியர்களின் பொறுமை கைமீறியதால் 2016யில் காலவரையற்ற போராட்டத்தை அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பத்து நாட்கள் காலவரையற்ற போராட்டம் நடத்திய பின்பு சட்டப்பேரவை விதி எண்.110ன் கீழ் 11 அறிவிப்புகளை செல்வி ஜெயலலிதாவின் அரசு வெளியிட்டது. அதன்பிறகு ஜெயலலிதா அம்மையார் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்ட நிலையில் ஆட்சிப்பொறுப்பேற்ற எடப்பாடி பழனிச்சாமி அரசு ஊழியர்களை ஒரு பொருட்டாகவே மதிக்காததால் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தேர்தல் களத்தையே போராட்டகளமாக மாற்றி அதிமுக அரசை வீட்டுக்கு அனுப்பிய வரலாறுதான் 2021 தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் நடந்தேறியது.

சென்ற தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் எங்களுடைய கோரிக்கைகளில் உள்ள நியாயங்களை உணர்ந்து கொண்டு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் போராட்டங்கள் நடத்திய இடங்களுக்கே நேரடியாக வந்து எங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளித்ததோடு நாங்கள் நடத்திய மாநாட்டிலும் கலந்துகொண்டு ஆசிரியர்கள் அரசு ஊழியர்களின் அனைத்து கோரிக்கைகளையும் ஆட்சிக்கு வந்ததும் தீர்த்து வைப்பேன் என்று உறுதிமொழியையும் தந்தார். அவர் சொன்னபடி அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்கள் குடும்பத்தினருடன் வாக்களித்ததோடு மட்டுமல்லாமல் பிரச்சாரங்களும் செய்து திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக அமர முக்கியப் பங்காற்றினோம்.

ஆனால் முதல்வராகி இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும் அவர், தேர்தலிலும் அதற்கு முன்பும் கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட செயல்படுத்தாமல் இருப்பதோடு, அவுட்சோர்சிங் 12 மணி நேர வேலை போன்ற கார்ப்பரேட் ஆதரவு அரசாணைகளை வெளியிட்டு ஒட்டுமொத்த அரசாங்கத்தையும் தனியார்மயமாக்கும் முயற்சிகளை மேற்கொள்வதும் அவற்றுக்கு ஒட்டுமொத்த எதிர்ப்புக் கிளம்பியதும் அவற்றை திரும்பப் பெறுவதுமான குழப்பமான மனநிலையில் செயல்பட்டு வருகிறார். இதன்மூலம் தமிழ்நாட்டில் ஆள்வது எந்தக்கட்சியாக இருந்தாலும் அவர்கள் யாரும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களுக்கான உரிமைகளை கொடுப்பதற்கு மனமற்றவர்களாக உள்ளார்கள் என்பதும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அரசுப்பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் ஓட்டுக்களை பெறுவதற்காக எந்த நிலைக்கும் இறங்கி வந்து பொய்யான வாக்குறுதிகளைச் சொல்வார்கள் என்பதையும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் உணர்ந்துகொண்டுள்ளனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பதவியேற்று இரண்டு ஆண்டுகள் முடியும் தருவாயில் உள்ள நிலையிலும் மாண்புமிகு தமிழக முதல்வர் தேர்தலுக்கு முன்பு அரசு ஊழியர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட இதுவரை நிறைவேற்றவில்லை என்பது ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மட்டத்தில் பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இதுவே அரசு ஊழியர்களை போராட்டக் களத்திற்கு உந்தித் தள்ளியுள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தொடங்கப்பட்டபோது அதன் பிரதான கோரிக்கையாக இருந்த மத்திய அரசுக்கு இணையான ஊதியம் 20 ஆண்டுகள் தொடர்ந்து போராடி பெறப்பட்ட உரிமையாகும். 2003ஆம் ஆண்டிலிருந்து பழைய ஓய்வூதியத்தை திரும்ப கொண்டுவர வேண்டும் என்ற ஒற்றைக் கோரிக்கையை வலியுறுத்தி தமிழ்நாட்டில் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கிறோம். இவைபோக

நிலுவையில் உள்ள வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் சரண்டர் வழங்கப்படாமை சிறப்பு காலமுறை ஊதியத்தில் உள்ள சத்துணவு / அங்கன்வாடி ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம், 20 ஆண்டுகளாக தீர்க்கப்படாத ஊதிய முரண்பாடுகள் என எங்கள் உரிமை கேட்பு பட்டியல் நீள்கிறது. புதிய உரிமைகளுக்காக போராடவேண்டிய தமிழ்நாட்டின் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தற்போது பறிக்கப்பட்ட உரிமைகளை திரும்பப் பெறுவதற்காகவும், இருக்கின்ற உரிமைகளை விட்டுவிடாமல் காப்பதற்காகவும் போராட்ட களத்தில் நிற்கவேண்டிய அவல நிலை எழுந்துள்ளது. இதற்கு காரணம் மக்கள் நல அரசு என்பதன் முழுமையான அர்த்தத்தை புரிந்துகொள்ள மறுக்கும் அரசாங்கங்கள். தமிழகத்தை மாறி மாறி ஆண்டு வரும் திமுக, அதிமுக என்ற இரண்டு கட்சிகளும் தமிழக அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து, நயவஞ்சகமாக ஏமாற்றி ஆட்சியில் அமர்ந்துகொண்டு சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தமிழகத்தில் உள்ள அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மற்றும் இதர அரசு ஊதியம் பெறும் ஊழியர்களை தொடர்ந்து ஏமாற்றி வருவதையே வாடிக்கையாக கொண்டுள்ள அற்பத்தனமான காரியமாகும்.

ஆனால் இங்கே கேரளாவில் உள்ள அரசோ அரசு ஊழியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் என அனைத்துத் தரப்பு உழைக்கும் மக்களின் வாழ்வாதாரங்களை அக்கறையோடு புரிந்துகொண்டு அவரவர்தம் உரிமைகளை வழங்கி வருகிற அரசாக உள்ளது. சமீபத்தில் இந்திய தொழிலாளர் ஏடு (Indian Labour Journal) தேசத்திலேயே அதிகமான தினசரி கூலியை தொழிலாளர்களுக்குக் தரும் மாநிலமாக கேரளாவை அறிவித்துள்ளது.

இதனால், இங்குள்ள அரசு ஊழியர்கள் தங்கள் ஓய்வுகாலத்தில் அச்சமின்றி வாழும் நிலை உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. அதைவிட முக்கியமானது இங்கு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு எழும் பிரச்னைகளை உட்கார்ந்து உடனடியாக தீர்த்து வைக்கும் தோழமை அரசாங்கம் செயல்பட்டு வருவதால், கேரள மாநிலத்தில் உள்ள அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் இந்த மாநிலத்தை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதில் அரசுக்கு உறுதுணையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் கேரள அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுடன் கேரளா அரசாங்கம் கொண்டுள்ள நல்லுறவை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பெரும் ஆதங்கத்துடன் பார்க்கிறது.

கேரள மாநிலத்தைப் போல தமிழ்நாட்டிலும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் போன்ற உழைக்கும் மக்களின் வாழ்வாதாரத் தேவைகளை உள்ளார்ந்து புரிந்து கொண்டு, அவர்களின் உரிமைகளை பிரச்னைகளை, கோரிக்கைகளை கேட்டு, அவர்களுக்கு வழங்க வேண்டிய நியாயமான நிவாரணங்களை செய்து தரும் நேர்மையான, உண்மையான, தோழமை மனப்பான்மையுள்ள அரசாங்கத்தை ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். தமிழகத்தையும் கேரள மாநிலத்தைப் போல் அனைத்து வளங்களிலும் முன்னேற்றம் காணும் மாநிலமாக உயர்த்திட ஆர்வம் கொண்டுள்ளோம். உங்களைப்போன்ற ஆளுமைகளும், தோழமைகளும் தரும் நம்பிக்கையையும், உற்சாகத்தையும், உத்வேகத்தையும் நெஞ்சில் நிரப்பிக் கொண்டு, காலத்தை ஒருநாள் மாற்றுவோம், கவலைகள் யாவையும் போக்குவோம் என்ற தீரா தாகத்தோடு தொடர்ந்து போராட்டக் களத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், இதர உழைப்பாள மக்களும் நின்றுகொண்டிருக்கிறோம். உங்கள் ஆதரவும், பக்கபலமும் தமிழ்நாடு அரசு ஊழியர்களின் உரிமைகளை மீட்டுப்பெறுவதில் ஆதர்சமாக மட்டுமல்ல நேரடியாகவும் இருந்து எங்களின் வெற்றிகளை எளிதாக்கும் என்பதில் எனக்கு எவ்வித ஐயமும் இல்லை.

கேரளா என்ஜிஓ யூனியனின் வைரவிழா மாநாடு கேரளா மாநிலத்திற்கு மட்டுமல்ல இந்திய மாநிலங்கள் அனைத்திற்கும் புதிய நம்பிக்கை ஒளியைத் நிச்சயம் தோற்றுவிக்கும். மாநாடு சிறக்க தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வீரஞ்செறிந்த வாழ்த்துக்கள்.

●

# தொழிலாளி வர்க்க பாசத்தை துறக்காத தோழர் சர்க்கரை செட்டியார் !

**- பெரணமல்லூர் சேகரன்**

இறுதிவரை வர்க்க பாசம் கட்டிய தொழிற்சங்கத் தலைவர் சர்க்கரைச் செட்டியார்

சர்க்கரைச் செட்டியார் ஆங்கிலத்தில் இளங்கலை பட்டம் பெற்றவர். பரிதிமாற்கலைஞரிடம் தமிழ் கற்றவர். சிறிது காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். பின்னர் சட்டம் பயின்றார். சிறிது காலம் வழக்குரைஞராகவும் செயல்பட்டார். ஆனால் பொதுத்தொண்டு அவரை ஈர்த்தது.

ஆரம்பத்தில் விடுதலைப் போரில் ஈர்க்கப்பட்டு சென்னை நகர காங்கிரஸ் கமிட்டி செயலாளராகவும் இருந்துள்ளார். 1924ல் திருவண்ணாமலையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமை ஏற்ற சக்கரைச் செட்டியார், காங்கிரஸ் தேர்தலில் பங்கேற்க வேண்டும் என்கிற தீர்மானத்தை ஆதரித்தார். 1927ல் காங்கிரஸை விட்டு விலகிவிட்டார். “காங்கிரஸ் கட்சியில் உட்கட்சி ஜனநாயகம் இல்லை. முற்போக்கு எண்ணம் கொண்ட இளைஞர்களை பெரிய தலைவர்கள் அடக்குகின்றனர்” என்று குற்றம்சாட்டி காங்கிரசிலிருந்து விலகி நீதிக் கட்சியில் சேர்ந்தவர் ஓராண்டில் அங்கிருந்தும் விலகிவிட்டார். பின்னர் தன் வாழ்வின் இறுதிவரை தொழிலாளர்களுக்கு உழைப்பதிலேயே செலவிட்டார்; எந்தக் கட்சியிலும் சேரவில்லை.

“எனக்கு முன்பின் தெரியாத இரண்டு பேர் அன்றைய தினம் காலை என்னைக் காண வந்ததை என்னால் மறக்க முடியாது. கஷ்டத்துக்கு ஆளாகும் தொழிலாளர்கள் பற்றி என்னிடம் கூறினார்கள். பக்கிங்காம் கர்நாடிக் ஆலை பற்றி என்னிடம் கூறினார்கள். நான் அந்த ஆலையை முழுமையாக அறியவில்லை என்றாலும் சிறிது கேள்விப்பட்டிருக்கிறேன். உணவு இடைவேளைக்கு சிறிது நேரமே வழங்கப்படுகிறது. ஒரு கவளம் வாயில் போட்டுக் கொள்வதற்குள் நேரம் முடிந்து விடுகிறது. தொடர்ந்தால் வாயில் மூடப்பட்டு வெளியேதான் நிற்க வேண்டும். இத்தகைய நிலையில்தான் தொழிலாளர்கள் உள்ளதை அறிந்தேன். உடனடியாக காரை வரவழைத்தேன். அறிமுகம் இல்லாத அந்த இருவரையும் அழைத்துக் கொண்டு பெரம்பூர் விரைந்தேன்.” இவ்வாறு ‘லேபர் இன் மெட்ராஸ்’ புத்தகத்தில் பி.பி.வாடியா குறிப்பிடுகிறார். திரு.வி.கவும் சக்கரைச் செட்டியாருமே அவ்விருவர்.

தமிழகத்தின் முதல் சங்கமான சென்னை தொழிலாளர் சங்கத்தில் இருவரும் பெரும் பங்காற்றினர். சென்னையில் ரிக்ஷா தொழிலாளர், ஆலைத் தொழிலாளர் ,அப்பளத் தொழிலாளர், கள் இறக்கும் தொழிலாளர், மூக்குப்பொடித் தொழிலாளர் என எங்கும் சங்கம் கண்டதில் சக்கரைச் செட்டியாரின் பங்கு குறிப்பிடத்தக்கது. ஏஐடியுசி என்கிற மத்திய தொழிற்சங்கம் 1920 அக்டோபரில் உருவானது. இதன் மாநிலத் தலைவராக 1943-45 மற்றும் 1951-56 காலகட்டத்திலும் துணைத் தலைவராக 1945 லும், செயல்பட்டார். சங்கம் தடை செய்யப்பட்ட 1948-49 ஆண்டுகளில் கடும் அடுக்குமுறையை எதிர்கொண்டு, உரிமையை நிலை நாட்ட உறுதியுடன் போராடியவர். 1920ல் சென்னையில் தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பை உருவாக்குவதிலும் திரு.வி.க, மிருணாளினி சட்டோபாத்யாயா ஆகியோருடன் சக்கரைச் செட்டியாரும் பெரும் பங்கு வகித்தார். இவரையும் திரு. வி.கவையும் 1921 ல் நாடு கடத்த பிரிட்டிஷ்

அரசு திட்டமிட்டது என்பதும், லார்டு வில்லிங்டன் அதற்கான முயற்சியில் ஈடுபட்டார் என்பதும், நீதிக் கட்சி அமைச்சர்களாக இருந்த பனகல் ராஜாவும், தியாகராஜ செட்டியாரும் கடும் எதிர்ப்புக் காட்டியதால் கடைசி நொடியில் முயற்சி கைவிடப்பட்டது என்பதும் வரலாறு.

இவர் சென்னை பெத்துநாய்க்கன் பேட்டையிலிருந்து சென்னை மாநகராட்சி உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். மாநகர மேயராக செயல்பட்டவர். 1952-56 ல் சட்ட மேலவை உறுப்பினராகச் செயல்பட்டவர்.

இவர் மேயராக இருந்த போது ஒரு பிறந்த நாள் விழாவில் தியாகராய நகர் சாலை ஒன்றுக்கு இவர் பெயர் வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது. "நான் உறுப்பினராக உள்ள பெத்துநாய்க்கன் பேட்டையில் ஓர் சாலைக்கு ஏற்கெனவே என் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இனி எந்தச் சாலைக்கும் என் பெயர் சூட்ட வேண்டாம்" என உறுதியாக மறுத்தார். 1956ல் சென்னை மாகாண சட்ட மன்றத்தில் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் சி.சுப்பிரமணியத்தால் முன் மொழியப்பட்டது. மேலவையில் அதனை ஆதரித்து சக்கரைச் செட்டியார் ஆற்றிய உரை இன்னும் இளமை குன்றா உரையாக உள்ளது. ஒரு வழக்கில் கைது செய்யப்பட்ட போது 'என்னிடம் உள்ள ஒரே சொத்து நான் உடுத்தி இருக்கும் வேட்டியும், கோவணமும், சட்டையும், புத்தகமும்தான். அதை வேண்டுமாயின் பறிமுதல் செய்து கொள்ளுங்கள்' என்று சொன்னவரை நீதிபதி மிரண்டு விடுதலை செய்தார்.

கம்யூனிஸ்ட் தலைவர்கள் எஸ்.ஏ.டாங்கே, இ.எம்.எஸ், ஏ.எஸ்.கே.அய்யங்கார், பி. ராமமூர்த்தி, கே.டி.கே. தங்கமணி என பலரோடு தோழமை பூண்டு தோழராகவே வாழ்ந்தார். 1958 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 14 ஆம் நாள் தன் 82ஆம் வயதில் உயிர் துறக்கும் வரை தொழிலாளி வர்க்க பாசத்தைத் துறக்காத தோழர் அவர். (ஜுன் 14 சர்க்கரை செட்டியார் நினைவுதினம்) ●

**கவிதை**

# மாற்றம் காணலே பொறுப்பு!

நாடாளுமன்ற
உறுப்பினர்களைக் கலக்காமல்
நாடாளுமன்றக் கட்டடம் !

இருபது கட்சிகள் பங்கேற்பின்றி
இந்திய நாடாளுமன்றக் கட்டடத் திறப்பு !

இந்தியாவின் முதல் குடிமகள் இல்லாமல்
இந்தியப் பாராளுமன்ற புதுமனைப் புகுவிழா!

சாந்தமான சிங்கமுகங்கள் அரசு சின்னம்
சினமாக கோரைப் பற்களுடன்
அமைந்தது பின்னம் !

நுழைவாயிலில் விரல்நீட்டி
சாணக்யன் ஆவேசமுடன்
இழையோடும் சர்வாதிகார
சிந்தனைக் குறிப்புடன் !

ஐம்பத்தாறங்குல மார்பனின்
உள்ளக் கிடைக்கையில்
ஐம்பதடி நீளத்தில் பாற்கடல் கடைதல் !

தேவர்கள் ஒருபுறம் அரக்கர்கள் மறுபுறம்
தேவாமிர்தம் கடைந்தளித்த
புராணக் காட்சி பிற்போக்குத் திறம்(?)

சிந்துவெளிப் பண்பாட்டுத் தொடக்கம்
பிந்தித் தள்ளும் வேதப்
பண்பாட்டுத் தொடக்கம் !

இதிகாசம் வரலாறாகும் கோலம்
விடுதலைப் போர் மறைக்கும் காலம் !

மன்னிப்பு மன்றமாய் பாராளுமன்றம்
சாவர்க்கர் பிறந்தநாளில் தோற்றம் !

எங்கும் எதிலும் சம்ஸ்கிருதக் காட்சி
பிறமொழிகளைப் புறக்கணிக்கும் சாட்சி !

நீதி சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம்
அநீதியானது ஆள்வோர்க்கு விரோதமானது

பன்மைத்துவ ஒழிப்பில் வேலைப்பாடுகள்
ஒருமைத்துவ வன்ம காட்சிப்பாடுகள்

முடியாட்சி செங்கோலும்
கடைந்தெடுத்த இந்துத்துவாவும்
அகண்ட பாரத வரைபடங்களும்
மேலும் மேலும் வெறுப்பு அரசியலும்
புதிய பாராளுமன்றக் கட்டடமாய் இருப்பு
பதிய வைத்து மாற்றம் காணலே பொறுப்பு !

**- பெரணமல்லூர் சேகரன்**

# ஒரு ஆழ்கடலின் சுயதரிசனம்!

**- மு.அன்பரசு**

பார்ப்பதற்கு பாந்தமான முகம். பழகுவதற்கு இனிமையான மனம். எங்கேனும் கூட்டங்களில், நிகழ்சிகளில், கருத்தரங்கங்களில், மாநாடுகளில் நம்மைப் பார்த்துவிட்டால் தவறாமல் நலம் விசாரிக்கின்ற தோழமை, நம்முடைய இயக்கத்தின் செயல்பாடுகளை ஊக்குவிக்கவும், ஆக்கபூர்வமான கருத்துக்களை எடுத்துச் சொல்லி இயக்கத்தை எப்படி கவனமுடன் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்று போதிக்கக் கூடிய ஆளுமை இதுதான் தோழர் ஏ.கே.பி.என்று தொழிற்சங்கவாதிகள் முதல் தோழர்கள் வரை அழைக்கக் கூடிய தோழர் ஏ.கே.பத்மநாபன், சிஐடியு இயக்கத்தின் அகில இந்திய துணைத் தலைவர்.

தொழிற்சங்க போராட்டங்கள் வீறுகொண்டு எழுந்த 1960களின் பிற்பகுதியில் தொழிற்சங்க இயக்கத்தில் கள வீரராக செயல்படத் தொடங்கி சிஐடியு வின் மாநில அளவிலான தலைவர்களில் ஒருவராக உயர்ந்து பின்னர் அதன் அகில இந்திய தலைவராக ஆறு ஆண்டுகாலம் செயல்பட்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினராகவும் இருந்து தற்போது சிஐடியு அகில இந்திய துணைத் தலைவராக செயல்பட்டு வரும் தோழர் ஏ. கே.பத்மநாபன் அவர்களுடன் சமீபத்தில் பேசும் வாய்ப்பு கிட்டியது. அப்போது அவர் தன் பேச்சினூடே `புத்தகம் பேசுது`` இதழில் தன்னுடைய பேட்டி வந்துள்ளதை கூறி இயலுமானால் அது குறித்த விமர்சனத்தை பதிவிடும்படி கேட்டிருந்தார்.

`புத்தகம் பேசுது`` இதழில் அவருடைய பேட்டியை படித்த பின்பு பெரிய மலைப்பாக இருந்தது நமக்கு. ஒரு அகராதிக்கு விமர்சனம் எழுதச் சொன்னால் எப்படி இருக்குமோ அந்த மலைப்புத்தான். 1960களின் பிற்பகுதியில் இருந்து இன்று வரையிலான தமிழக தொழிற்சங்க வரலாற்றினை அவருடைய பேட்டி படம் பிடித்துக் காட்டியிருந்தது. கடலின் கரையில் நின்று போராடும் அலைகளைப் பார்ப்பதுபோல் பல போராட்டக் களங்களில் தோழர் ஏ.கே.பி. யை பார்த்திருந்த நமக்கு அவரின் பேட்டி ஒரு ஆழ்கடலின் சுயதரிசனமாகத் தெரிந்தது. அவருடைய பேட்டியின் முக்கியமான சில பகுதிகளை நம்முடைய தோழர்களும், நிர்வாகிகளும், சங்க உறுப்பினர்களும் அறிந்து கொள்வது மிகவும் உபயோகமானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

1948, 49, 50 ஆம் ஆண்டுகளில் ஏவிவிடப்பட்ட கடுமையான அடக்குமுறை நிகழ்வுகள் அந்த பின்னணியோடு பள்ளிப்படிப்பு அந்த நேரத்தில் இருந்த அரசியல் வளர்ச்சிப்போக்கு இவற்றோடு ஏற்பட்ட ஈர்ப்பு தோழரை அவர் பள்ளி முடிந்த பின் சென்னைக்கு அழைத்து வந்து கம்யூனிஸ்ட் இயக்கத்தோடு தொடர்பு ஏற்படுத்தியது

தமிழகத்தில் குறிப்பாக சென்னையில் 1967 ஆம் ஆண்டு வரை ஒடுக்கப்பட்டு வந்த தொழிலாளர்கள், தொழிற்சங்க இயக்கத்தினுடைய மிகப்பெரிய பகுதி அரசாங்கத்துடனும் முதலாளிகளுடன் இணைந்து நின்று செயல்பட்ட நிலை தொழிற்சங்க ஜனநாயகம் என்பது முற்றிலும் மறுக்கப்பட்ட ஒன்றாக இருந்த சூழலில் 1967 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றம் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற வகையில் தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கைகளோடு, குறைந்தபட்ச ஊதியத்திற்காகவும் நடைபெற்ற இதர பல போராட்டங்களை தேர்தல் காலத்தில் திராவிட முன்னேற்ற கழகம் தன்னுடைய கோஷங்கள் ஆகவே மாற்றிய பின்னணியில் அவை மிகப் பெரிய எதிர்பார்ப்புகளை உருவாக்கி இருந்தது

ஒவ்வொரு தொழிற்சங்க போராட்டத்திற்கும் அதற்கே உரிய தனிச்சிறப்புகள் உண்டு என்றாலும் சிம்சன் தொழிலாளிகளின் போராட்டம் மிகப்பெரிய கவனத்தை ஈர்த்தது. ஏனெனில் நேரடியாக அரசாங்கத்தோடு மோதும் வகையில் நடைபெற்ற போராட்டம் அது. 1967 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளில் பணிபுரிந்து


வந்த, போராட்டங்களில் ஈடுபட்டு வந்த ஒவ்வொருவருக்கும் இன்னும் சொல்லப்போனால் தொழிலாளிகள் மட்டுமல்ல அந்த காலத்தில் போராடிக்கொண்டிருந்த மாணவர்கள் உட்பட அனைவருக்குமே இது பசுமையான நினைவுகளாக இருக்கும். ஏனென்றால் இந்த காலத்தில் தான் தமிழகத்தின் மற்ற பல பகுதிகளில் விவசாயிகளுடைய, விவசாயத் தொழிலாளர்களுடைய பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய, சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுடைய என்று பல பகுதி தொழிலாளர் போராட்டங்களும் எழுச்சியோடு நடைபெற்று வந்தன

தொழிற்சங்க இயக்கத்தில் மிகப்பெரிய தாக்கத்தை தோழர் ஏசிபி அவர்களுக்கு உருவாக்கியவர் தோழர்கள் வி பி சிந்தன், கே எம் ஹரிபட், பிஆர் பரமேஸ்வரன், கஜபதி, டி ஜி கே கிருஷ்ணன் மற்றும் தோழர்சி பி தாமோதரன் ஆகியோர். எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து அவரை சென்னை மாநில தொழிற்சங்க ஊழியராக மாற்றியதில் மேற்கண்ட தோழர்களின் பங்கு வெகுவாக இருந்தது.

தோழர் வி பி சிந்தன் அவரை வழி நடத்த, தொழிலாளிகளுடன் நடந்து கொள்ள வேண்டிய அணுகுமுறைகள், தொழிலாளர் நலச்சட்டங்கள், பிரச்சினைகள் இவற்றுக்கெல்லாம் தோழர் ஹரிபட் வழிகாட்டுதல்கள் உதவிகரமாக இருந்தன.

இன்றைக்கு இருப்பதை விட அன்றைக்கிருந்த தலைவர்களுக்கும், ஏ.கே.பி.போன்ற புதிய ஊழியர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே மிக மிக நெருக்கமான உறவு நிலவியது. எல்லோருடனும் சுமார் அறுபது ஆண்டுகாலம் சென்னையிலுள்ள தொழிற்சங்க இயக்கத்தோடு கம்யூனிஸ்ட் இயக்கத்தோடு தோழர் பிணைப்பு கொண்டிருந்தார்

1979 க்கு பிறகு மிகப்பெரிய மாநில தொழிற்சங்க தலைவர்களான தோழர்கள் பாலசுப்பிரமணியன், ஆர். உமாநாத், நல்லசிவன், வைத்தியநாதன், வீரமணி, சீ கோவிந்தராஜன், ஹேமசந்திரன் என இவர்கள் எல்லோருமே தோழர்.ஏகேபி மாநில மையத்திற்கு வந்த பிறகு ஒவ்வொரு கட்டத்திலும் வழிகாட்டிகளாக இருந்து அவரை மேம்படுத்துவதில் பெரும் பங்களிப்பு செலுத்தினர்.



சென்னைக்கு வந்தபோது ஒரு எழுத்தோ வார்த்தையோ தமிழில் தெரியாத ஏ,கே,பி, தன்னுடைய கடுமையான முயற்சியினாலும் தன்னுடைய ஆசிரியர் வற்புறுத்தினாலும் தமிழ் மொழியை கற்க வேண்டும் என்ற ஒரு வெறியோடு மொழிப் பிரச்சினையை அணுகியுள்ளார் எழுத்துக்களை எழுதி படிப்பது அதை வார்த்தையாக மாற்றுவது பிறகு கொஞ்சம் கொஞ்சமாக தினத்தந்தியை படிப்பது என இவையெல்லாம் அடுத்த ஒரு வருடத்திற்கு நடந்து அது முடிவதற்குள்ளேயே தேர்வு எழுதி, இன்டர்வியூ முடித்து அசோக் லேலண்ட்-இல் பயிற்சியாளனாக சேர்ந்தார். இதற்கு இடையிலான 6 மாத காலத்திற்குள் தேவையான அளவிற்கு தமிழில் பேசுவதற்கு கற்றுக் கொண்டார்

இப்படி ஆரம்பித்த தமிழ் மொழி கற்றுக்கொள்ள வேண்டும் என்ற வெறி 1967 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பேசுவதற்கு ஒரு ஆளாக அவரை மாற்றியது.

1870ஆம் ஆண்டு சிடி தொடங்க தொடக்க மாநாட்டிற்கு ஒரு பிரதிநிதியாக சென்னை மாவட்ட குழு அவரை அனுப்பி வைத்தது. பிரதிநிதிகள் இடையே தமிழ் தமிழில் மொழிபெயர்ப்பு செய்தது தோழரும், பின்னாளில் தமிழ்நாடு மின்சார வாரிய தொழிலாளர்களின் தன்னிகரற்ற தலைவராக உயர்ந்த ஜானகிராமனும்

தான். அன்றைக்கு ஏராளமானவர்களுக்கு ஆங்கிலம் புரியாது. அங்குதான் மொழிபெயர்ப்பு என்ற பணியை முதலில் தொடங்கினார் அவருக்கும் தன்னம்பிக்கை உருவானது மற்றவர்களுக்கும் அவரை அடையாளம் தெரிந்தது. திரும்பி வந்தவுடன் 1976ஆம் ஆண்டிலிருந்து பொதுக்கூட்டங்களிலும் மற்ற நிகழ்வுகளிலும் தனது மொழிபெயர்ப்பு பணியைத் தொடர்ந்தார் தோழர் இந்த மொழிபெயர்ப்புக்கான தயாரிப்பு என்று சொல்வதைவிட இரு மொழிகளிலும் நிறைய படிப்பது பேசுவது என்று தான் கூறவேண்டும் 1870 வரை நடைபெற்ற மாநாட்டில் தொடர்ந்து 5 நாட்கள் உரை உரைகளை மொழிபெயர்த்தத பிறகுதான் அவரால் இதை செய்யமுடியும் என்ற நம்பிக்கை உருவானது ஆனால் அங்கு நேரடியாக உடனடியாக மொழிபெயர்ப்பது என்பது வேலை அல்ல. பேசி முடித்த பிறகு அதை தமிழில் உடனடியாக எடுத்துக சொல்வது என்பதாகத்தான் இருந்தது. நேரடியாக மொழிபெயர்ப்பு செய்ததற்கான முயற்சி என்பது தொடங்கி கிட்டத்தட்ட இந்தியாவில் கட்சியினுடைய பெரிய தலைவர்கள் அனைவரின் பேச்சுக்களையும் தோழரே மொழிபெயர்ப்பு செய்திருக்கிறார்.

அப்ரெண்டிஸ் என்பது சுரண்டலை முழுமைப்படுத்தும் எந்த சட்டமும் பொருந்தாது என்று சொல்வதற்கும் உள்ள ஒரு திட்டமிட்ட முயற்சி இது. எண்பதுகளின் இறுதியிலும் தொண்ணூறுகளிலும் எல்லா இடங்களிலும் பெருமளவிற்கு வரும்போது தான் அன்றைக்கு இருந்த திமுக அரசு தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகளில் எத்தனை சதவீதம் பயிற்சி அளவில் இருக்கலாம் என்று ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று பேசப்பட்டு கிட்டத்தட்ட அதற்கான சட்ட முன்வரைவுகளும் கூட தயாரிக்கப்பட்டது. எனவே 1960களிலிருந்து 2020க்கு வரும்போது பயிற்சியாளர் என்ற முறை அல்லது கேஷுவல் அல்லது காண்ட்ராக்ட் என்ற முறை என பல்வேறு வகையான வழிகளில் நுழைந்துள்ளது. அதாவது அவுட்சோர்சிங் அல்லது காண்ட்ராக்ட் என்பது பல வகையான மாற்றங்களை

பெற்றுள்ளது இவை அனைத்தும் பல வடிவங்களில் உள்ளன அதனால் அன்றைக்கு இருந்த நிலைமையும் அன்று இருந்த தொழிற்சங்க உணர்வு என்பதும் முற்றிலும் வேறுபட்டது. இன்றைக்கு பயிற்சியாளர் என்பது பல வகைகளில் மாறியுள்ளது நிரந்தர வேலைவாய்ப்பு அல்லது மத்திய அரசு உருவாக்கிய பல திட்டங்கள் எல்லாம் கைவிடப்பட்டு விட்டன ஏனெனில் சுதந்திரமான சுரண்டல் என்ற நிலைக்கு தொழிலாளர்கள் வந்ததால் இந்த வடிவம் என்றில்லாமல் தொழிற்சங்க உரிமை கேட்க முடியாத அளவுக்கு பல வடிவங்களால் ஆன சுரண்டலாக இன்றைய சூழல் இருக்கிறது.

'உங்கள் சொந்த நலனுக்காக வேணும் இந்த பிரச்சினையில் நீங்கள் தலையிடவில்லை என்றால் நீங்கள் யாருமே போராட முடியாது. உரிமைகளைக் கேட்க முடியாது எந்த சுரண்டலையும் எதிர்க்க முடியாது என்ற நிலை உருவாகும்' என்று நிரந்தரத் தொழிலாளர்களிடம் தொழிற்சங்க இயக்கம்

கொண்டு செல்ல வேண்டியுள்ளது. பல பொதுத்துறை நிறுவனங்களில் 30, 40, 45 சதவீதம்தான் நிரந்தர தொழிலாளர்கள் உள்ளனர். மற்ற எல்லோருமே பல வகைகளில் உள்ள தொழிலாளர்கள் தான். இந்த நிலையில் சங்கங்களின் கடமை என்பது சொந்த நலனுக்காகவேனும் இவர்களை சங்க ரீதியாக திரட்டி அவர்களது உரிமைகளுக்காக இந்த நிரந்தர தொழிலாளர்களும் அவருடைய சங்கங்களும் செயல்படுவது நிரந்தர தொழிலாளர்களின் சொந்த நலன்களுக்கு அவசியமான ஒன்று. இதை இன்றைய தொழிலாளர்களும் உணர்ந்தாக வேண்டும் தொழிற்சங்க இயக்கமும் உணர்ந்தாக வேண்டும்

இன்றைக்கு முதலீடு என்பதும் கூடுதல் லாபம் என்பதுமான நோக்கம் வருகிறபோது சேவைத் துறையை நோக்கி மூலதனம் செல்கிறது ஆனால் உற்பத்தித் துறையின் வளர்ச்சி என்பது உத்தரவாதப்படுத்த படாமல் இன்னொரு பக்கத்தில் சேவைத் துறையின் வளர்ச்சிக்கு போய் சேரவே முடியாது. கணினி அல்லது அதே போன்று இருக்கக்கூடிய இயந்திரமயமாக்கல் அந்த இயந்திரம் என்ற வார்த்தை கூட இன்று போய் விட்டது இன்று செயற்கை நுண்ணறிவு என்ற நிலைக்கு வந்து விட்டது எனவே இந்த மூன்று அம்சங்களிலுமே அதாவது முதலீடு, உற்பத்தி, சேவை, ஆகியவற்றில் ஒரு சரியான விகிதாச்சாரம் இல்லாவிட்டால் நாட்டில்

பொருளாதாரம் நீடித்து நிற்க முடியாது. இன்றைக்கு உள்ள நிலைமையில் திட்டமிடுதலும் கைவிடப்பட்டு விட்டது. எங்கு வேண்டுமானாலும் முதலீடு செய்யலாம் என்ற சுதந்திரமும் வந்துவிட்டது. நேரடி அன்னிய முதலீடு என்பது எந்தத் துறையிலும் எந்த அளவிற்கும் போகலாம் என்றும் வந்தாகிவிட்டது. ஆகவே முதலீடு செய்பவர்களுக்கு ஒரே நோக்கம் தான் அது அவர்களுடைய லாபம்.

இதில் அல்லது அதில் முதலீடு செய் என்று இந்த பிரச்சினைகளை தொழிற்சங்க இயக்கமமோ அல்லது தொழிலாளர்களோ அல்லது நாட்டு மக்களோ சொல்லமுடியாது. அப்போது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ள கொள்கைகளை முன்வைக்கவேண்டும். இப்போது கொள்கைகளின் விளைவுகளை எதிர்த்துப் போராடுவது என்பது கொள்கைகளை எதிர்த்த போராட்டமாக மாற வேண்டும் என்ற வகையில் கொள்கைகளை மாற்றுக - என்று மாற்றத்திற்கான போராட்டத்தைத் தீவிரமாக்க வேண்டும்.

தோழர் பி.டி.ரணதிவே அடிக்கடி சொல்வதுண்டு 'விளைவுகளை எதிர்த்து நடத்துகிற போராட்டம் நம்மை எங்கேயும் கொண்டு செல்லாது, இத்தகைய விளைவுகளை உருவாக்கும் நாசகாரக் கொள்கைகளை எதிர்த்து போராட்டம் நடத்த வேண்டியதன் அவசியத்தை தொழிலாளர்களுக்கு புரியவைக்க வேண்டும். விலைவாசி உயர்வுக்கு காரணமான கொள்கைகளை மாற்றாமல் பஞ்சப்படி உயர்வுக்கான போராட்டமாக அதை நடத்தி முன்னுக்கு செல்ல முடியாது. சுருக்கமாகச் சொல்வதெனில் கொள்கைகளை எதிர்த்த போராட்டமாக அதை மாற்ற வேண்டும் இதில் அடுத்து மிகப்பெரிய அபாயமாக இன்னும் முழுமையான தெளிவு இல்லாத விஷயமாக இருப்பது கணினிமயம் அல்லது அது போய் தானியங்கி என்பது ஆகி பின்பு செயற்கை நுண்ணறிவு என்றாகி இப்போது சாட் ஜிபிடியில் வந்து நிற்கிறது. அந்தத் துறையைச் சார்ந்த பல நூற்றுக்கணக்கான அறிஞர்கள் இன்றைக்குள்ள சாட் ஜிபிடி போன்று இருக்கக்கூடிய மிக வேகமான லாபத்தை ஈட்டுவதற்கான இந்த போட்டியை நிறுத்திவிட்டு எது சமூகத்திற்கு தேவை. இன்றைய தேவை எது என்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று வெளிநாடுகளில் ஐரோப்பாவில் அமெரிக்காவில் இத் துறையில் வல்லுனர்களாக இருப்பவர்கள் கூட இத்தகைய கோரிக்கையை வைத்துள்ளனர்.

1863 முதல் 60 ஆம் ஆண்டில் எல்லாம் அசம்பிளி யூனிட்டில் பார்த்த நிலைக்கும், பிறகு மாருதி போன்ற நிறுவனங்களின் அசம்பிளி யூனிட்டில் வந்திருக்கும் ரோபோக்கள் என்பது மிகப்பெரிய மாற்றம், அதாவது இயந்திரமயமாக்கல், கணினிமயமாக்கல். தானியங்கி முறை. செயற்கை நுண்ணறிவு. என்று வந்திருக்கக்கூடிய மாற்றம் தொழில்துறையில் என்ன விளைவுகளை உருவாக்கும் என்று முழுமையாக இன்னும் மதிப்பிடப் படவில்லை ஏனெனில் லாபத்தை பெருக்குவது என்பது சமூகத்திற்கு அதனால் ஏற்படுகின்ற லாபம் என்பதாகும். அறிவியல் துறையின் முன்னேற்றம் என்பது உலகிற்குப் பயன்பட வேண்டும் என்று லெனின் காலத்திலிருந்து நாம் சொல்லி வருகிறோம். ஆனால் ஒரு முதலாளித்துவ சமூக முறையில் இயந்திரத்தின் சமூகப் பயன்பாடு என்பது நடக்காது என்பதை தொழிலாளிகளுக்கு புரியவைத்து இந்த கொள்கைகளில் அடிப்படையான மாற்றம் காண்பதற்கான போராட்டமாக அதை மாற்ற வேண்டியுள்ளது

90-91 ஆம் ஆண்டிற்குப் பிறகு சர்வதேச மாநாடுகளில் உலகமயமாக்கலுக்கு எதிராக எந்த ஒரு நிகழ்வாக இருந்தாலும் சரி அது பிரேசிலோ இலங்கையோ கொரியாவோ இவற்றிலெல்லாம் பங்கேற்கும் வாய்ப்புகள் கிடைத்தது. திரும்பி வரும்போது நாங்கள் பேசிக்கொண்ட ஒரே விஷயம் இதுதான் 'மொழி தான் வேறுபட்டு இருக்கிறதே தவிர பிரச்சினைகள் கிட்டத்தட்ட எல்லோருக்குமே ஒன்றாகத்தான் இருக்கிறது.' இந்த சுரண்டலுக்கு எதிராக ஒரு ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டியிருக்கிறது

**கூட்டுறவு**

கூட்டுறவே நாட்டுயர்வு, ஒவ்வொருவரும் அனைவருக்காக அனைவரும் ஒவ்வொருக்காக' என்று சொல்லப்படும் விஷயங்கள் எல்லாம் சரிதான். ஆனால் இதில் என்ன பிரச்சினை? கூட்டுறவு என்பது அரசின் கொள்கைகளோடு நேரடியாக இணைக்கப் பட்டு

சூறையாடப்படுகிறது அதுமட்டுமின்றி ஜனநாயக இயக்கங்கள் வலுவாக உள்ள இடங்களில் கூட்டுறவு என்பது உண்மையிலேயே அந்த இயக்கத்தின் உறுப்பினர்களுக்கான அவர்களுக்கு நலன் பயனளிக்கக் கூடியதாகவும் உலகத்திற்கு நன்மை செய்வதாகும் விளங்குகிறது. ஒரு மாநிலம் என்ற வகையில் பார்த்தால் இந்த துறையில் மிகுந்த முன்னேற்றத்தை எட்டியிருக்கக்க கூடிய இடம் கேரளா தான். ஆனால் கூட்டுறவு என்பது ஆளுங்கட்சியின் விருப்பத்திற்குரிய ஒரு விளையாட்டுக் களமாக ஆக்கப்பட்ட அனுபவம் தமிழ்நாட்டுக்கு உண்டு.

ஆனால் கூட்டுறவு இயக்கத்தின் ஒட்டுமொத்தமான வாய்ப்புகள் இன்றைக்கு ஒன்றிய அரசின் கைகளில் உள்ளது. இப்போது உள்துறை அமைச்சகமும் சரி அல்லது விவசாய துறையோடு இணைந்த கூட்டுறவு அமைச்சகமும் சரி நேரடியாக இந்தியா முழுவதும் கூட்டுறவு அமைப்புகளில் தலையிடும் வகையில் ஒன்றிய அரசு, சட்டம் இயற்றியுள்ளது இதன் மூலம் இதுவரை மாநிலங்களுக்கு கூட்டுறவு அமைப்புகளின் மீது இருந்த உரிமை பறிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் செல்லப் பிள்ளைகளின் மூலம் மாநில மக்களின் உழைப்பில் வளர்ந்த கூட்டுறவு அமைப்புகளை விழுங்குவதற்கான வாய்ப்புகள் மிக அதிகமாக ஆகியுள்ளது.

தொழிலாளி, விவசாயி, விவசாயத் தொழிலாளி என்ற மூன்று பிரிவினரும் தான் நாட்டில் செல்வத்தை உருவாக்குபவர்கள். இது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான் மத்திய அரசும் நமது மாண்புமிகு பிரதமரும் இதை ஏற்றுக்கொள்வதில்லை. அவர்களுக்கு செல்வத்தை உருவாக்குபவர்கள் என்றால் அம்பானியும் அதானியும்தான். இந்த நாட்டின் மிகப் பெரும்பான்மையான மக்கள் இந்த மூன்று பிரிவுகளை சார்ந்தவர்கள் என்ற வகையில் அவர்களுடைய அடிப்படை பிரச்சனைகளுக்காக கூட்டாக ஒரு இயக்கத்தை நடவடிக்கையை கொண்டு செல்ல வேண்டும் என்ற முயற்சி இப்போது டெல்லி பேரணியில் நடந்ததல்ல 1980இல் சிஐடியு-வின் முன்முயற்சியில் இதர மத்திய தொழிற்சங்கங்களுடன் இணைந்து கிளர்ச்சிப் பிரச்சார குழு என்ற அமைப்பு மும்பையில் நடைபெற்ற மாநாட்டில் உருவாக்கப்பட்டது. 1982 ஜனவரி 19 அன்று ஓர் அகில இந்திய வேலைநிறுத்தம் அந்த கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்பட்டது. 2018 இல் சிஐடியு மீண்டும் முயற்சி எடுத்து சிஐடியு, அகில இந்திய தொழிலாளர் சங்கம் என்ற, கொள்கை ஒற்றுமை கொண்ட மூன்று அமைப்புகளும் இணைந்து 2018 செப்டம்பர் 5ஆம் தேதி டெல்லியில் மிகப்பெரிய பேரணியை நடத்தின. 2020இல் சம்யுக்த கிசான் மோர்ச்சா என்ற 500க்கும் மேற்பட்ட விவசாய அமைப்புகளின் கூட்டமைப்பு உருவானது

14 அம்ச கோரிக்கைகள் என்று இப்போது முன்வைத்திருக்கும் கோரிக்கைகள் தொழிலாளிகளின் விவசாயிகளின் விவசாய தொழிலாளர்களின் கோரிக்கைகள் மட்டுமல்ல அது ஒட்டுமொத்த மக்களுடைய கோரிக்கைகளும் ஆகும். அந்த கோரிக்கை பட்டியலைப் பார்த்தால் தெரியும் அது மக்களுடைய சாசனம் அதைத் தொடர்ந்து கொண்டு செல்வது என்று முடிவு எடுத்தோம். இந்த ஓர் இயக்கத்தை நடத்தி முடிப்பது என்பது அல்ல மூன்று அமைப்புகளும் தொடர்ச்சியாக அதை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் அதன் பொருள்

தங்களின் உயிர் வாழ்தலுக்கு உயிர் வாழ்வதற்காக உழைப்புச் சுரண்டலை எதிர்க்க வேண்டிய நிலையில் இருந்த போதிலும் தொழிலாளர்கள் பெருமளவில் இன்னும் சொல்லப்போனால் உலக அளவிலும் கூட வலதுசாரி தாக்கத்திற்கு இரையாவத இதற்கு காரணம் உண்மையான இடதுசாரி கருத்துக்களை அழுத்தமாக உழைப்பாளி மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் ஏற்பட்ட பின்னடைவு என்றுதான் கூற வேண்டும் ஏனெனில் சுரண்டலை எதிர்த்து அடிப்படையான அம்சங்களை கொண்டு செல்ல வேண்டிய இடத்தில் வலதுசாரி கருத்துக்கள் ஏன் வருகிறது என்று சொன்னால் இந்தியா போன்ற நாடுகளில் இருக்கக்கூடிய நிலப்பிரபுத்துவ பிடிமானம் நிலப்பிரபுத்துவ கருத்துக்கள் முதலாளித்துவத்திற்கு முந்தைய சூழல் இன்று வரையிலும் ஆதிக்கம் செலுத்தக் கூடிய நிலையில் இந்த சமூக மாற்றத்திற்கு எதிராக நிற்கும் அனைத்து பிற்போக்கு சக்திகளும் ஒன்றிணைவதை இந்தியாவின் அனுபவத்தில் நான் பார்க்கிறேன் அதற்கு மதம் சாதி பழக்கவழக்கங்கள் என எல்லாமே பயன்படுத்திக்

கொள்ளப்படுகின்றன ஐரோப்பா என்று வருகிறபோது முதலாளித்துவம் வளர்ச்சி அடைந்த நாடுகள் இருந்தாலும் அங்கே ஆட்சியில் ஏற்படக்கூடிய பின்னடைவுகளை மிக சாமர்த்தியமாக வலதுசாரி சக்திகள் பயன்படுத்திக்கொள்கின்றன

90 ஆம் ஆண்டிற்குப் பிறகு சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு முதலாளித்துவ நாடுகளில் அல்லது ஐரோப்பாவில் அல்லது மற்ற பல நாடுகளில் இடதுசாரி இயக்கங்களுக்கு ஏற்பட்ட பலவீனமும் வீழ்ச்சியும் இந்த வலதுசாரி கருத்துக்கள் மேலோங்க உதவின. அங்கே வர்க்கரீதியான நிலைப்பாடுகளுடன் கூடிய உறுதியான இடதுசாரிக் கருத்துக்கள் இல்லை அதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஒரு வரியில் சொல்ல வேண்டுமானால், அந்த இடதுசாரி கருத்துக்களை தொழிலாளர்களும் கொண்டுசென்று சேர்ப்பதில் ஏற்பட்டிருக்கக் கூடிய பலவீனம் அல்லது குறைபாடு என்று சொல்லலாம் இந்த குறைபாடுகளுக்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டியுள்ளது. அவை களையப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை விவாதிக்க வேண்டியுள்ளது ஆனால் காரணம் என்று சொன்னால் இது தான் பார்த்தால் இதுதான்-ரியல் லெப்ட் இஸ் ஃபெயிலிங் அதற்கு ஆயிரம் காரணம் இருக்கிறது ஆனால் பெயிலிங் என்பது உண்மை.

**மகளிர்**

பெண்கள் வேலையில் உள்ள பெண்களை எடுத்துக்கொண்டால் இன்றைக்குள்ள தொழிற்சங்க இயக்கத்தை கூர்ந்து கவனித்தால் இந்தியா முழுவதும் நடைபெறும் தொழிலாளர் போராட்டங்களில் கணிசமான அளவிற்கு பெண்கள் அணி திரள்வதை பார்க்கிறோம் அரசினால் சொல்லப்படுகிற ஒரு பகுதியினர் அவர்கள் மதிய உணவு திட்டத்தில் வேலை செய்வோர், அங்கன்வாடி ஊழியர் போன்று பல துறைகளில் பெண்கள் லட்சக்கணக்கானோர் வந்துவிட்டனர். வாலண்டியர் என்ற பெயரில் அவர்கள் எவருக்கும் தொழிற்சங்க உரிமைகள் இல்லாமல் சமூக நலனுக்காக பணியாற்ற கூடிய தொண்டர்கள் என்ற பெயரில் கல்வித்துறையில் விவசாயத்துறையில் மருத்துவத் துறையில் என பல துறைகளில் இது நிலவுகிறது. அதேபோன்று தேசிய சுகாதார இயக்கம் என்பதன் கீழ் ஆஷா அல்லது அங்கன்வாடி போன்றவற்றில் பல லட்சக்கணக்கான பெண்கள் பணியாற்றும் நிலை உள்ளது இதில் ஒரு நல்ல அம்சம் என்னவெனில் அந்த தொழிலாளர்கள் ஒன்று திரண்டுள்ளனர் களத்திற்கு வருகின்றனர் சாலை மறியல் போராட்டங்களில் கூட அவர்களது பங்களிப்பு அதிகமாக உள்ளது. வேலை நிறுத்தங்கள் நடக்கின்றன டெல்லிக்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். பேரணி நடத்துகின்றனர். இது ஒருபக்கம். மறுபக்கத்தில் பெண்களுக்கான வேலைவாய்ப்பு என்பது அணி திரட்டப்பட்ட துறைகளில் அல்லது அரசு அலுவலகங்களில் புதிய ஆளெடுப்பு கிட்டத்தட்ட இல்லை என்று ஆகிவிட்டபோது பெண்களுடைய அதாவது உரிமைகள் பெற்ற பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

1979ஆம் ஆண்டு சென்னை நகரத்தில் நடைபெற்ற சிஐடியு நான்காவது அகில இந்திய மாநாட்டில் தான் உழைக்கும் பெண்கள் அரங்கம் உருவானது ஒரு மத்திய தொழிற் சங்கம் அதுவரையில் உழைக்கும் பெண்களுக்கான கமிட்டிகள் எதையும் கொண்டிருக்கவில்லை 1979இல் நாம் அதை உருவாக்கினோம் அதற்கு பிறகு வேறு பல மத்திய தொழிற்சங்கங்கள் பெயரளவிற்கு அடங்கிய கமிட்டிகளை உருவாக்கியுள்ளன பல துறைகளில் அது வந்துள்ளது பெண்களை சங்கமாக்குவதிலும் ஓரளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது சிஐடியு போன்ற அமைப்புகளில் கிட்டத்தட்ட இருபத்தி எட்டு சதவீதத்திற்கும் மேலான பெண்கள் உள்ளனர். இது பெருமைக்குரிய ஒரு விஷயம்தான். அதேபோன்று அந்தப் பெண் தொழிலாளர்களை தொழிற்சங்கத்தில் பொறுப்பாளர்களாக மாற்றுவது என்ற வகையில் சிஐடியு அகில இந்திய மையத்திலிருந்து மாவட்டக்குழு வரை மாநிலத்திலிருந்து மாவட்டத்திலிருக்கும் சங்கங்கள் வரை பெண் ஊழியர்களும் உருவாகியுள்ளனர். ஆனால் ஒட்டுமொத்தமாக முன்னேற்றம் இல்லை என்றே கூற வேண்டும் அதற்கு காரணம் பெண்களை பின்னுக்குத்தள்ளுகின்ற ஆணாதிக்க மனப்பான்மை எல்லா மட்டத்திலும் உள்ளது, தொழிற்சங்க இயக்கமும் அதில் இருந்து விடுபட்டது அல்ல.

**வகுப்புவாதம்**

இந்திய மக்களுக்கு மிகப் பெரும் சவால்களில் ஒன்றாக இருப்பது வகுப்புவாதம். மதரீதியாக தொழிலாளர்களை பிளவுபடுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது 1992ல் பாபர் மசூதி இடிக்கப்பட்ட காலத்தில்கூட ஓரளவிற்கு தொழிலாளர்களிடையே அதற்கு எதிரான ஒரு கருத்தை உருவாக்குவதில் நாம் வெற்றி பெற்றோம். ஆனால் இன்று பார்க்கும்போது 2014 ஆம் ஆண்டிற்குப் பிறகு வகுப்புவாத சக்திகளுடைய தலையீடு திட்டமிட்ட செயல்பாடு அரசு மூலமான செயல்பாடு ஆகிய அனைத்திலும் சேர்ந்து ஊழியர்கள் தொழிலாளர்களிடையே வகுப்புவாத கருத்துக்கள் ஆழமாக ஊடுருவி சென்றுள்ளதை மிகப்பெரியதொரு அபாயமாக சிஐடியு கருதுகிறது. எந்த நேரத்திலும் இது நமக்கு பேராபத்தை ஏற்படுத்தக்கூடும். 1984 ஆண்டு அக்டோபர் 31-ம் தேதி இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்ட பிறகு பல தொழில் மையங்களில் இருந்த தொழிலாளர் குடியிருப்புகளில் சீக்கியர்களுக்கு எதிரான தாக்குதல் குறித்து நேற்றுவரை உறவாடிக் கொண்டிருந்த அவர்கள் எங்களை தாக்கினர் என்று அவர்கள் கூறியபோது பெரிதும் கவலையுற்றோம். மிக விரைவிலேயே இந்த வகுப்புவாத தீயை பற்ற வைக்க முடியும் என்ற அனுபவம் நமக்கு இருக்கிறது. இன்று அதை எதிர்த்து பிரச்சாரம் ஒரு பக்கத்தில் நடந்தாலும் இன்றைக்கு அது பேரபாயமாக வளர்ந்திருக்கிறது. இந்த அபாயம் உருவாகிக்கொண்டிருக்கிறது என்பதை தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்க ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் உணர்த்த வேண்டிய பொறுப்பு தொழிற்சங்க இயக்கங்களுக்கு உண்டு மிகப்பெரியதொரு சவாலாக அது நம் கண்முன்னால் நிற்கிறது. தொழிற்சங்க உரிமை என்பது ஜனநாயக ஜனநாயக உரிமையில் ஒரு பகுதிதான். ஜனநாயகம் தாக்கப்படும் போது முதலில் பாதிக்கப்படுவது தொழிற்சங்க இயக்கம் தான் எப்போதும் தொழிலாளி வர்க்கம்தான். உறிட்லர் காலத்திலிருந்து இன்று வரை அதுதான் நிலைமை. இங்கேயும் தொழிலாளர் விதிமுறைகள் மூலமாகவும் வேறு வகையிலும் தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப்படுவதற்கு ஏராளமான உதாரணங்கள் உள்ளன

ஓர் அரசு ஊழியர் அரசின் கொள்கைகளுக்கு எதிரான மாநாட்டில் கலந்து கொண்டால் அதற்கு குற்றப்பத்திரிகை வழங்க கூடிய அளவிற்கு உங்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்கக்கூடிய நிலைமை உருவாகியுள்ளது ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று அறிவித்தால் ஆர்ப்பாட்டத்திற்கு போனால் நடவடிக்கை பாயும் என்று சுற்றறிக்கை உடனடியாக வருகிறது சங்கம் சேரும் உரிமை, கூட்டுபேர உரிமை மறுக்கப்படுகிறது. ஒரு புறத்தில் ஜனநாயக உரிமைகள் தாக்கப்படும்போது அதை எதிர்த்து ஒன்றுபட்டு போராட வேண்டியுள்ளளது. தொழிற்சங்க இயக்கம் தொழிலாளியிடம் ஒன்றுபட்டு போராடடு என்கிறது. மறுபக்கத்தில் நமது எதிரி முகாம் அவர்களை பிளவுபடுத்த திட்டமிட்டு முயற்சிக்கிறது. இதற்கு மதம் ஜாதி ஆகியவை பயன்படுத்தப்படுகிறது. கடவுள்களும் மற்றவர்களும் பயன்படுத்தப்படுகின்றனர். இந்த நிலையில் ஒரு மாற்றத்தை நாம் கொண்டுவர வேண்டியுள்ளது.

75 ஆண்டுகால இந்தியாவில் ஏற்பட்டுள்ள நிலைமை மிகப் பெரும்பான்மையானவர்கள் இன்றைக்கும் வேதனையில் வாடிக் கொண்டிருக்கின்றனர் என்பதே. இந்த நிலையில் தொழிற்சங்க இயக்கம் மிகப்பெரிய சவால்களை சந்திக்கும் ஒரு காலத்தில் நாம் இருக்கிறோம். அந்த சவால்களை எதிர்கொள்வதற்கு தத்துவார்த்த ரீதியாக, அரசியல் ரீதியாக, அமைப்பு ரீதியாக, தொழிலாளி வர்க்கத்தினை தயார்படுத்தும் பணியை நாம் செய்ய வேண்டியுள்ளது. சிஐடியு அந்தப் பணியைச் செய்யவே பாடுபட்டு வருகிறது. ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com